சுதந்திரன்
SUTHANTHIRAN
194A, SILVERSMITH STREET, COLOMBO-12.

தாமரைப்பூ மார்க் சந்தனாதித்தைலம்
லட்சக்கணக்கான மக்களின் ஆதரவைப்பெற்றது நறுமணமுடையது எங்கும் கிடைக்கும்.
முழு இலங்கைக்கும் சோல் ஏஜண்ட்:- ஈ.ஹைதரலி & பிரதர்ஸ்
22, 2/7 ஆதமலி பில்டிங், கொழும்பு 11.

புத்தகம் 6 | நந்தன ஹு கார்த்திகை மீ 22உ | [7-12-52] | ஞாயிற்றுக்கிழமை | ரபீஉல் அவ்வல் பிறை 19 | இதழ் 27

# ★ சேரிஒழிப்பு பிசுபிசுத்து விட்டது

## நிதி நெருக்கடியும் அசிரத்தையும் காரணமாம்

### பிரதம மந்திரிக்கு ஸ்தலஸ்தாபன கமிஷனரின் அறிக்கை

[நமது நிருபர்]

பிரதம மந்திரி லண்டனுக்குப் புறப்படமுன்பு ஸ்தல ஸ்தாபன மந்திரி காரியாலயத்திலிருந்து சேரி ஒழிப்பு சம்பந்தமாக விபரங்கள் கேட்டிருந்தார்.

சேரி ஒழிப்பு இன்னும் பத்து ஆண்டுகளுக்கு ஒத்திபோடப்பட்டன என்ற செய்தியை "சுதந்திரன்" 'டைப்ஸ்' ஆகிய பத்திரிகைகள் பிரசுரித்ததையொட்டியே இந்த விபரங்கள் கேட்கப்பட்டன.

"தற்போதைய வீட்டு நெருக்கடியை முன்னிட்டு சேரி ஒழிப்புக்குத் திட்டம் தீட்டுதல் சாத்தியமல்ல" என்று இது விஷயமாக ஸ்தல ஸ்தாபன மந்திரி அலுவலகம் சமர்ப்பித்த அறிக்கை ஒன்று கூறுகிறது. இதுதான் வீடுகட்டும் திட்டம் சம்பந்தமாக பல சிபார்சுகளைச் சமர்ப்பித்திருக்கும் அரசாங்க அதிகாரிகளின் போக்கு.

இது விஷயத்தைப்பற்றி பிரதமர் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு எழுதிய கடிதம் கூறுவதாவது:- "ஸ்தல ஸ்தாபனங்கள் சேரி ஒழிப்பைத் தீவிரமாக அமுல் நடத்தவில்லை. சேரி ஒழிப்பைத் தாமதப் படுத்துவதின் விளைவாக அரசாங்கத்தைக் கடுமையாகக் குறை கூறுகின்றனர். ஆகவே சேரி ஒழிப்பை அரசாங்கம் மேற்கொள்ளுவதைப் பற்றி தங்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்"

இப்பிரச்னையைப்பற்றி தற்போதைய நிலைமையை விளக்குவதற்காக உடனே ஓர் அறிக்கை தயாரிக்குமாறு ஸ்தல ஸ்தாபன கமிஷனருக்கு மந்திரி உத்திரவிட்டார்.

இந்த அறிக்கை இப்பொழுது பிரதமர் காரியாலயத்திற்கு கிடைத்துவிட்டது. வீட்டுப் பஞ்சத்தின் காரணமாக சுகாதாரமற்ற சேரி வீடுகளை உடைத்து போடுவதற்கு விருப்பாமையும் நிதி நெருக்கடியுமே சேரி ஒழிப்பு தாமதமாவதற்குக் காரணங்களென்றும், கொழும்பு நகரசபை கூட இதில் தீவிர சிரத்தை காட்டவில்லையென்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

பட்டினச் சபைகளிலும், சிறு நகரசபைகளிலும் புதிதாக வீடுகள் கட்டப்படும்போதே சேரிகளும் ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்காக மேற்கண்ட சபைகளைச் சேர்ந்த இடங்களில் கட்டப்படும் வீடுகளுக்கு மத்திய சர்க்கார் நிதி உதவியளிக்கத் தயாராயிருந்தும் அரசாங்கத்தின் முயற்சி வெற்றிகரமாக நிறைவேறவில்லை" என்பதைச் சுட்டிக் காட்டும் பிரஸ்தாப அறிக்கை 'வீடுகட்டும் குழுவின்' சிபார்சுகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறது.

## தென் ஆபிரிக்காவில் கடும் புயல்

அரபிக்கடலில் ஒரு புயல் உருவாகியது. கப்பல்கள் 'உஷார்' உத்தரவு கொடுக்கப்பட்டு நடுக் கடலிலேயே நங்கூரம் பாய்ச்சி நின்றுவிட்டன. இச் சூராவளி தென்னாபிரிக்காவிலும் வீசியதால் பெருவாரியான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. அங்கே சுமார் 40 பேர் உயிரிழந்துவிட்டனர். கார்கள் சில ஆகாயத்தில் பறந்தனவாம்.

## எலிஸபெத் இழந்த பார்வையைப் பெற்றாள்

### வியன்னா டாக்டரின் அற்புத சாதனை

தூக்கிலிடப்பட்ட ஒரு மனிதனின் கண்ணிலிருந்து பிடுங்கப்பட்ட கருமணியை நான்கு வயதுள்ள எலிஸபெத் என்ற குழந்தையின் கண்ணில் பொருத்தி அதற்குப் பார்வையைப் பெற்றுக்கொடுத்திருக்கிறார் பீஸல் என்ற வியன்னா கண் நிபுணர். இது கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

இதற்கு முன்பும் இம்மாதிரியான வியன்னா டாக்டரின் அற்புத சாதனையொன்று கண் ஆஸ்பத்திரியில் நடைபெற்றிருக்கிறது. ஜாங்கினி என்ற மாணவியையும் அவளது சகோதரியையும் கொலை செய்த குற்றத்திற்காக கண்டியில் தூக்கிலிடப்பட்ட ஒரு ஆசிரியரின் கருவிழியை தோண்டி எடுத்து ஒரு குருடரின் கண்ணில் பொருத்தி அவருக்கு இழந்த பார்வையை மீட்டுக்கொடுத்துவிட்டாராம் இந்த கண்கண்ட தெய்வம்.

எலிஸபெத் என்ற இப்பெண் குழந்தை மூன்று வருடங்களுக்கு முன்பு மாந்தத்தினால் ஒரு கண்ணில் பார்வையை இழந்துவிட்டது. அதற்கு செய்யாத சிகிட்சை இல்லை. பார்க்காத வைத்தியமில்லை. அவைகளொன்றும் பயன்பெறாமல் போகவே இறுதியில கண் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டது.

வியன்னா நிபுணர் டாக்டர் பீஸல் கண்டியில் தூக்கிலிடப்பட்ட ஒருவனின் கருவிழியை பிடுங்கி, இக் குழந்தையின் கண்ணில் பொருத்தி சிகிட்சை செய்ததின் மூலம் அது இழந்த பார்வையை மீண்டும் பெற்றுக்கொண்டது.

## லஞ்ச விசாரணைக் கமிஷன் நியமனம்

### மந்திரி இதுவரை அங்கீகரிக்கவில்லை

ஸ்தலஸ்தாபனங்களில் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக ஒரு "லஞ்ச விசாரணைக் கமிஷனை" நியமனம் செய்ய வேண்டுமென்ற திட்டத்தை ஸ்தல ஸ்தாபன இலாகா நிரந்தரக் காரியதரிசி அங்கீகரித்தும் கூட, பிரஸ்தாப கமிஷனை நியமனம் செய்வது விஷயமாக இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை.

நிரந்தர காரியதரிசியும் கமிஷனரும் இத்திட்டத்தை அங்கீகரித்திருக்கிறார்களெனினும், ஸ்தல ஸ்தாபன மந்திரியின் அங்கீகாரத்தை அது இதுவரை பெறவில்லை.

காலஞ்சென்ற பிரதம மந்திரி தற்காலிக மந்திரியாக கடமையாற்றும் போதே இந்தக் கமிஷனை நியமனம் செய்வதைபற்றி விவாதித்தாரென்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. பிரஸ்தாப கமிஷனைக் காலதாமதமின்றி நியமனம் செய்ய வேண்டுமென்று அவர் தன் விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். ஆகவே இக்கமிஷன் நியமன வேலை தொடங்கி சுமார் 14 மாதங்கள் கடந்துவிட்டனவெனினும், ஏறகனவே எதிர்பார்த்தபடி இவ்வருட இறுதிக்குள் கமிஷன் நியமிக்கப்படுமென்று கருதுவதற்கு இடமில்லை.

## தலைமை ஆசிரியர்களுக்குப் போலித் தாக்கீது!

### சதியைக்கண்டுபிடிக்க விசாரணை நடைபெறுகிறது

கடந்த மாதம் 8-ம் வகுப்புத் தெரிவுப் பரீட்சை நாடு முழுவதும் நடைபெற்றதல்லவா? பரீட்சை முடிந்து சில தினங்களில் பாடசாலை தலைமை ஆசிரியர்களுக்கு கல்வி இலாகா தலைமை அலுவலகத்திலிருந்து ஒரு சுற்றறிக்கை கிடைத்தது. அதில் பிரஸ்தாப பரீட்சையில் விடைகள் எழுதப்பட்ட தாள்களை எல்லாம் குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு தாக்கீது பிறப்பிக்கப்பட்டிருந்ததாம். தலைமை ஆசிரியர்கள் சிலர் இதனைச் சந்தேகித்து விசாரித்தபொழுது [illegible] அறிக்கை என்பது தெரிய வந்தது.

இந்த போலித் தாக்கீதை அனுப்பியவர்களைக் கண்டுபிடிப்பதற்காக கல்வி இலாகா விசாரணை செய்து கொண்டிருக்கிறது. பிரஸ்தாப பரீட்சையின் கேள்வித்தாள்கள் வெளியானதும் இதே சதியின் ஒரு பகுதிதானென்று கருதப்படுகிறது.

கொரியா போர் முனையில் ஒரு கடற்கரையிலிருந்து மற்றோர் கடற்கரை வரை தகர்க்கமுடியாத ஒரு அரணை கம்யூனிஸ்டுகள் கட்டிமுடித்து விட்டதாக நியூ சீனா செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

—

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலுக்கு இன்று 78-வது பிறந்த நாள். இதற்காக நடந்த விருந்தில் அவரது குடும்பத்தினரும் நெருங்கிய நண்பர்களும் கலந்து கொண்டனர். ஏராளமான பரிசுகளும் ஆசிச் செய்திகளும் திரு சர்ச்சிலுக்கு வந்துள்ளன.

—

## நபீசா உம்மா மறைவு

ஜனாப் வி. எம். ஷபசுத்தீன் அவர்களின் புதல்வி ஜனாபா நபீசா உம்மா (வயது 26) சென்ற 29ம் திகதி ஒரு குழந்தையை பிரசவித்த பின்னர் காலமானார் அவரது ஜனாஸா மறுநாள் குப்பியாவத்தையில் நல்லடக்கம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள ஐயா!

தாங்கள் அனுப்பிய எஸ். பி எஸ் பதிமருந்தால் சகல வியாதிகளிலிருந்தும் பூரண சுகமடைந்தேன். மற்றும் பலர் இம்மருந்தினுல் நல்ல சுகமடைந்திருக்கிருர்கள்.

ஆகையால் இம்மருந்தை உற்பத்தி செய்பவர்களுக்கும், தங்களுக்கும் எனது நமஸ்காரம்.

இப்படிக்கு,
எஸ். சொள்ளமுத்து கங்காணி,
விக்லோ ஹில்ஸ்,
போவிட்டியமூல்லை டிவிஷன்,
வண்டுரம்பை போஸ்ற்று, 17-6-52.




இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றது

# எஸ். பி. எஸ். பதி மருந்து

## இதனுல் தீரும் நோய்கள

ஜுரம் தலைபாரம் தலைவலி தலைசுற்றல் சளி இருமல் க்ஷயம் அஜீரணம் அஜீரண வயிற்ருேட்டப் புளியேப்பம் மந்தம் வயிற்றுப்போக்கு வயிற்றிரைச்சல் வயிற்றுவலி வயிற்று உப்பிசம் பசியின்மை வாய் நாற்றம் இழுப்பு ஜன்னி காக்கைவலிப்பு பித்தரோகம் பெலவீனம் அசதி காமாலை கைகால் பிடிப்பு பாரிசவாய்வு அண்டவாய்வு குத்தல் எல்லாவித வாதரோகங்கள் பிளேக் காலரா இன்புளுயன்சா ஸ்திரீகளுக்கு உண்டாகும் சூதகவாய்வு சூதகஜன்னி சூலைக்கட்டு குழந்தைகளுக்கு மாந்தம் வயிற்ருேட்டம் ஜன்னி, ஜலதோஷ கச்குவான், இருமல் இவைபோன்ற சகல வியாதிகளுக்கும் கைகண்டமருந்து.

இந்த ஒரே மருந்து சகல வியாதிகளையும் குணமாக்குகிறது. உள்ளும், புறமும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு புட்டியிலும் உபயோக விபரம் அடங்கியிருக்கிறது.

**இம்மருந்தை லட்சக்கணக்கானமக்கள் உபயோகித்து சுகமும், சுபீட்சமும் பெற்றுள்ளனர்.**

ஏராச்த விலை! நிறைந்த குணம்

**புட்டி 1க்கு ரூ.1-25.** தபால் செலவு வேறு

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கவனிப்பு:- எங்கள் எஸ். பி. எஸ். பதிமருந்து வாங்குபவர்கள் ஏழு முகமுத்திரை இருக்கிறதா என்று கவனித்துப்பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்கிருேம்.

தயாரிப்பவர்கள்:- **எஸ். பி. எஸ. ஜெயம் அன் கோ,**
வேல் கெமிக்கல் ஒர்க்ஸ், மதுரை.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:—

**எவ். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ,**
34, செட்டியார்தெரு, கொழும்பு 11.
ஹெட் ஆபீஸ்:- 193, காலி ரோடு, கொள்ளுப்பிட்டி கொழும்பு (3)
Telephone: 6019
Telegram: Jayajeevi, Colombo.



# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரேநாளில் அறிந்துகொள்ளலாம்
நிர். 174 ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்லதசுகமாக கழித்து, அசதி, சோம்பல், மேல்கால் கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை பெரியது ரூ. 5-75 சிறியது விலை ரூ 3-00 இத்துடன் "ஆனந்தா கீழ்காய்நெல்லித்தைலத்தை' தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் இனுமாக அனுப்புவோம்.

பெரிது ரூ 5-75 சிறியது ரூ 3-00 வி பி பி. செலவுவேறு

புரொப்ரைட்டர்:- M. பொன்னையா
**ஆனந்தா வைத்தியசாலை**
நிர். 174 C, செட்டியார் தெரு, கொழும்பு-11


அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த

# பாராளுமன்றப் பிரதிநிதிகளின் உயிருக்கு ஆபத்து?

# அபிவிர்த்தித் திட்டங்களுக்கு சாவு மணி அடிப்பதின் விளைவு

## நமது சுதந்திரத்தின் மதிப்பு 10 சதம்

'வலவேகீர்ப்பாசனத்திட்டத்தை அரசாங்கம் கைவிடுமாஞல், நான் கழுத்தை அறுத்துகொண்டு உயிரை விட்டுவிடுவேன்" என்று ஹப்பந்தோட்டப் பிரதிநிதி திரு எதிரிசூரிய கடந்த வாரம் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினுர்.

தற்கொலை செய்துகொள்வதற்கு எத்தனையோ முறைகள் உண்டு ஆஸிட் குடித்தல், கழுத்தில் சுருக்குமாட்டிக் கொள்ளுதல், துப்பாக்கியைத் திருப்பிப் பிடித்தல் ஓடும் ரயிலின் முன்னுல் திடீரென சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தல், சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டம் என்ற துணிச்சலுடன் கடலில் இறங்குதல், கிணறுகளில் தலைகீழாக பல்டி அடித்தல், க்ஷவரக் கத்தியால் கழுத்தைப் பதம் பார்த்தல் முதலியவைகள் தான் இப்பொழுது சாதாரணமாக நாட்டில் கையாளப்படும் தற்கொலை முறைகள்.

### தற்கொலைப்பிரசாரம்

ஆஸிட் குடித்து—தூக்குப்போட்டுக் கொண்டு—கிணற்றில் குதித்து உயிரை விடும ஆசாமிகள் பல நாட்களுக்கு முன்பிருந்தே தற்கொலை செய்யப் போவதாக பிரசாரம் செய்துகொண்டு திரிவது இந்நாட்டுப் பழக்கமல்ல. அம்மாதிரிப் பிரசாரம் செய்பவர்களுமுண்டு. ஆனுல் அவர்கள் உயிரை விடுபவர்களல்ல—அதைக் கடைசி வரையில் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள்—கணவனுடன் சண்டைபோடும் மனைவியும், பெற்ருேர்களைப் பணிய வைப்பதற்காகப் பிள்ளைகளும், குடிக்க அல்லது சூதுவிளையாட மனைவியிடம் பணம் பிடுங்குவதற்காக கணவனும் தற்கொலை ஆயுதத்தைக கையில் எடுத்துகொண்டு மிரட்டுவது உண்டு. "உயிரை விடப் போகிருேம்" என்று பிரசாரம் செய்தவர்களெல்லோரும் உயிரை விட்டிருந்தால், இலங்கையில் ஜனத்தொகைப் பெருக்கம் ஏற்படக் காரணமே கிடையாது.

### எதிரிசூரியாவின் தற்கொலை?

திரு எதிரிசூரிய கூறியது வெறும் மிரட்டலாக இருக்க முடியாது. கழுத்தை அறுத்து கொள்ளத் தயாராகிக்கொண்ட பிறகே மேற்கண்டவாறு அவர் கூறியிருக்கலாம். அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி கழுத்தை அறுத்துகொண்டு உயிரை விட அரசாங்கம் அனுமதிக்காதென்றே நம்புகிருேம்.

நிதி நெருக்கடியை முன்னிட்டு பல அபிவிர்த்தித் திட்டங்களுக்கு ஆட்சியாளர் மூடுவிழா நடத்திவிட்டனர் என்பது அனைவருக்கும் தெரிந்த இரகசியம். தத்தம் தொகுதிகளில் கைவிடப்பட்ட திட்டங்களை நிறைவேற்ருவிட்டால் ஆஸிட் குடித்தோ, கடலில் குதித்தோ, தூககுப் போட்டுக் கொண்டோ உயிரை விட்டுவிடுவோம் என்று கூறி இதர பிரதிநிதிகளும் திரு எதிரிசூரியரைப் பின்பற்றி தற்கொலை செய்துகொள்ள முன்வந்தால், கடைசியில் அரசாங்கக்கட்சியில் ஒருவராவது மீதப்படுவாரா என்பது சந்தேகம்தான். இந்தகதி அவர்களுக்கு ஏற்படுமாயின், நாட்டை ஆட்சிபுரிய ஆள் இல்லாது போய், இந்த அரசாங்கம் அனுதை அரசாங்கமாகிவிடுமோ என்று அஞ்சுகின்ருேம்.

* * * * * *

இரண்டாவது எலிஸபெத ராணியின் உருவப் படம் அச்சிட்ட புதிய இரண்டு ரூபாய் கரன்ஸி நோட்டுகள சீக்கிரத்தில் இலங்கையில் வெளியிடப்படுமென்று இலங்கை மத்திய வங்கி அறிவித்திருக்கிறது.

இந்தியாவைப்போல நம் நாடும் சுதந்திரமடைந்து விட்டதே! பிரிட்டிஷ்நாட்டு ராணியின் உருவப் படத்தை நம் நாடடு நோட்டில் ஏன் அச்சிட வேண்டும், என்றெல்லாம் சில சந்தேகப் பிராணிகள் சங்கடமான கேள்விகளை எழுப்பலாம். "மகத்தான தியாகங்களை"ச் செய்து இலங்கை பெற்றிருக்கும் சுதந்திரத்தின் மதிப்பை அவர்கள் இன்னும் எடைபோட்டு பார்க்காமலிருப்பதுதான். இம்மாதிரியான சந்தேகம் ஏற்படக் காரணம் ரூபாய் சதம் என்ற நாணயங்களைக் கொண்டு இந்த நாட்டுச் சுதந்திரத்தை சுலபமாக மதிப்பிடலாம். ராணியின், அல்லது ராஜாவின் உருவப் படம் கரன்ஸி நோட்டில் அச்சிடப்படுகிறதா, இல்லையா என்பதைக்கொண்டு நமது சுதந்திரத்தை மதிப்பிடுவதைக் காட்டிலும், ரூபாய், சதம் கணக்கில் மதிப்பிடுவது ரொம்ப ரொம்பச் சுலபம்.


### மதிப்புரைக்கு கரன்ஸி நோட்டுகள்

உதாரணமாக புதிய இரண்டு ரூபாய் நோட்டை எடுத்துக்கொள்ளுங்கள்: அதில் 20 சதம் நமது சுதந்திரம் என்றும், ரூ 1-80ம் சுதந்திரம் இல்லை என்றும் நிர்ணயித்துககொண்டால் நம் நாட்டுச் சுதந்திரத்தின் மதிப்பீடு பட்டவர்த்தனமாக நமக்குத் தெரிவதோடு 6000 மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு நாட்டின் ராணியினது உருவப் படத்தை அச்சிடுவது எவ்வளவுதூரம் நியாயபூர்வமான செயல் என்பதும் தெளிவாகும். சுருங்கக்கூறின் நம் நாட்டுச் சுதந்திரததின் மதிப்பு ரூபாயிக்குப் பத்து சதம்தான்.

புதிய கரன்ஸி நோட்டுக்கு விரிவான மதிப்புரை எழுதுவதற்காக அது வெளிவந்தவுடன் நமக்கு அனுப்பி வைககுமாறு அரசாஙகத்தை கேட்டுக்கொளகிருேம்.

(குறிப்பு:- 'சுதந்திரனில்' மதிபபுரைக்காக ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்பி வைத்தல வேண்டும)

—முகரா



இந்தக்கார் 7 தினங்களில் 16, 851. 73 மைல பிரயாணம் செய்திருக்கிறது.

# கவிராயர் மகள்மீது காதல் கொண்ட காளை

## பாதிராத்திரியில் பாவையை கூட்டிக்கொண்டேகினேன்

## அண்ணாமலை ரெட்டியார் ஆத்திரத்தில் பாடிய காவடிச்சிந்து

(சுந்தரன்)

காவடிச் சிந்து பாடிய சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரைத் தெரிந்து கொள்ளாதவர்கள் இரார் நாடெங்கும் அவரது பாடல்கள் பாடப்பெறுகின்றன. தெலுங்கில் தியாகராசர் பாட்டுக்கள் போற்றப்படுவதேபோல் தமிழில் அண்ணாமலை ரெட்டியாரின் கவிதைகள் போற்றப்பட்ட காலமும் உண்டு. அவை கருத்தாழமும், பொருட்செறிவு இசை நுணுக்கமும் பொருந்தியவை.

தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்கு ரெட்டியாரது பாடல்களில் தனி விருப்பம் உண்டு. தனியாக உள்ளபோதெல்லாம் அவர் காவடிச் சிந்துகளைப் பாடிப் பாடிக் களிப்பாராம் பாரதியாரின் கவிதா சக்திக்குத் தூண்டுகோலாயிருந்தது ரெட்டியாரின் காவடிச் சிந்து என்று கூறினும் பொருந்தும்.

### ஊதாரி மருமகன்

அண்ணாமலை ரெட்டியாருக்கு ஒரே ஒரு மகள். மிகுந்த அழகு வாய்ந்த பெண். தன மகள்மீது அளவுகடந்த அன்புடையவர் ரெட்டியார். அவள் நற்பண்புமிக்கவளாய் நற்பெயரெடுக்க வேண்டும் என்பது அவரது அவா.

ரெட்டியாருக்குத் தங்கை மகன் ஒருவன் இருந்தான். கவர்ச்சிவாய்ந்த தோற்றமுடைய அவன் உறவுக்காரனாதலால் ரெட்டியார் வீட்டில் நடமாட உரிமைபெற்றிருந்தான்.

ரெட்டியாரது மகள் தன் அத்தை மகனது அழகிலே மயங்கிவிட்டாள். அவனுக்கும் அவள்மீது ஒரு கண் இருந்தது. இவர்கள உறவு அதிகரித்து வந்தது. இருவரும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர்.

ஆனால் ரெட்டியாருக்குத் தன் மகளை தன் மருமகனுக்குக் கொடுப்பதில் விருப்பமில்லை. ஏனெனில் அவன் ஊதாரியாக இருந்தான். நாலுபேரிடத்தில் நற்பெயரெடுக்காதவன். ஒருவித உத்தியோகமுமற்றவன். ஆகவே அவனைக் கூப்பிட்டுத் தன் கருத்தை வெளியிட்டுவிட்டார்.

மனமுவந்து மணம் புரியும் என்ற நினைப்பில் மண் விழுந்தது. ரெட்டியார் உறுதி உள்ளம்படைத்தவரென்பது அனைவருக்கும் நன்கு தெரியும். ஆகவே காதலரிருவரும் வீட்டைத் துறந்து ஓடிவிடுவதுஎன்று முடிவு செய்தனர்,

### மகள் ஓடிவிட்டாள்

ஒருநாளிரவு; பாதி ராத்திரிவேளை. அப்பொழுது ரெட்டியாரது தங்கைமகன் ஒருவருமறியாமல் தன் காதலியை அழைத்துக் கொண்டுசென்றுவிட்டான்.

வயதுவந்த பெண்ணொருத்தி ஒருவனுடன் ஓடிவிட்டாளென்றால் அது எவ்வளவு மானக்கேடு என்பது அதை அநுபவித்தோருக்குத்தான் தெரியும் ரெட்டியாருக்கு இது மிகவும் ஆத்திரத்தை மூட்டியது மகள் ஓடிவிட்டாளே என்று மானக்கேடாக இருந்தது. அவருடைய ஆத்திரமெல்லாம் அவர் எழுதிய காவடிச் சிந்தில் எழுத்துருவம் பெற்றுவிட்டது.

### நவீன நம்பிராசன்

அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த "பெண்ணைக் கூட்டிக்கொண்டு ஓடும்" நிகழ்ச்சி நம்பிராசன வாழ்க்கையிலும் நிகழ்ந்தது. முருகப்பெருமான் நம்பிராசன் புதல்வி வள்ளியை இதுமாதிரிதானே கடத்திச் சென்றிருப்பார் ரெட்டியாரது உள்ள நிலையை ஒத்துத்தான் நம்பிராசன் நிலை இருந்திருக்க வேண்டும். தன்னை நம்பிராசனாகப் பாவித்துக்கொண்டு பாட ஆரம்பித்தார் ரெட்டியார்.


பாதிராத்திரிவேளையில் வீட்டுப்
பக்கத்தில் வந்து
பாதகனொரு
பாவையைமெல்லக் [illegible]
பற்றிக் கூட்டிக்கொண் டேகினன்
பதைபதைக்குதே யெந்த
சோதனைப்பிர காரமா யென்னைத்
தொடர்ந்ததே பெருஞ்
சூதினல் வந்த
தொலையுமோ பிள்ளைப்
சுற்றத்தா ரறிந்தாலெனக்குமுன்
சொல்வரே பரி [illegible]
மையல்கொண்டொரு பையல்பின்செல
வயது மீறின
மார் கந்தோன் றின
வாசனைப் பல
மாதம் பத்துஞ் சுமந்து பெற்றவன்
வயிறுந் தானெரி

மேவி பஞ்ச
பாவி சிறு
கூவி கையைப்
னுவி
தோஷம் எவர்
மோசம் இனித்
பாசம் இதைச்
யாசம்
மாதோ இந்த
தேதோ சென்ம
னீதோ ஐயோ
யாதோ

என்று அழகாகப் பாடி முடித்தார். தன் வாழ்வில் ஏற்பட்ட இந் நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு அழியாத கவிதையொன்றை அக்கித் தந்துவிட்டார் சென்னிகுளத்துக் கவிஞர். அவர் இக்கவிதையில் தன் வாழ்வைத் வருணித்தார். அவர் அந்தப் பகுதியைப்

[11-ம் பக்கம் பார்க்க]

## உலக சமாதானமும் சித்திரமும்



கொரியா யுத்தத்திற்கு முடிவு காண்பதற்காக ஐ. நா. சபையின் அரசியற் கமிட்டியில் இந்தியத் தூதுகோஷ்டியின் தலைவர் திரு கிருஷ்ணமேனனால்பிரரேபிக்கப்பட்ட தீர்மானம் கடந்த திங்கட்கிழமையன்று பெருவாரியான வாக்குகளால் நிறைவேறிவிட்டது. சோவியத் கோஷ்டியைச் சேர்ந்த 5 நாடுகள் மட்டும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன உலக சமாதானத்தை உறுதிப்படுத்தும் தீர்மானமே இந்தியத் தீர்மானம் என்று பண்டித நேரு பிரஸ்தாப தீர்மானத்தை வர்ணித்திருக்கிறார்

இத் தீர்மானத்தை புதிய சீனு ஆதரிப்பதாக முதலில் கருதப்பட்டது தீர்மானத்தைப் பிரரேபிக்க முன்பு நேருஜீ சீனப் பிரதமர் செள என் லாயுடன் கடிதப்போக்குவரத்து நடத்தியதாகவும் கூறப்பட்டது சீனுவின் ஆதரவைப் பெற்றே கிருஷ்ண மேனன் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார் என்றுகருதிய அமெரிக்கா முதலில் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை ரஷ்யா தீர்மானத்தை எதிர்த்த பிறகு, சீனுவும் எதர்ப்பதாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. சீனு இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை விரும்பாத ரஷ்யா சீனுவைத் தன் பக்கம் இழுத்து கொண்டு "இந்தியாவே, சீனுவின்வ்வகாரத்தில் நீ அதிகம் தலையிடாதே. ஏனெனில் சீனு எங்களைச் சேர்ந்தது" என்று இந்தியாவைப் பார்த்து ரஷ்யா கூறிவிட்டதென்பது இதிலிருந்து தெளிவாகிவிட்டதென அரசியற் பார்வையாளர் கூறுகின்றனர். ஆயினும நேருஜீ மீண்டும் சீனுவுடன் இதுவிஷயமாக கடிதப்போக்குவரத்து நடத்துவதாகக் கூறப்படுகிறது.

ஐ நா சபையில் இப்பொழுது உலக சமாதானத்தை நிலை நிறுத்தும் விஷயமாக காரசாரமான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஐ நா. ஸ்தாபனத்தின் பந்தோபஸ்துச் சபை. கூடும் அறையின் சுவற்றில்நாாவே சித்திர நிபுணர் ஒருவர் தீட்டியிருக்கும் சித்திரத்தைப் படத்தில் காண்க!

## காதல் வாழ்வு

"சக்தி நேசன்"

கவியெழுத வேண்டிநிதம் எண்ணயெண்ணிக்
கண்டபலன் ஏதுமில்லை விந்தைமிக்க
புவியதனில் கவிவரையப் பொருளேயில்லைப்
புதுமையிதென் றயிர்த்துமனம் சலித்தபோதில்;
தவழுகருங் குழல்புரளும் உனது நெற்றி
தாவிவிரைந் தென்னெதிரில் வந்து நிற்கும்,
நவிலுதமிழ்க் கவிதையினி ஆயிரந்தான்
நானெழுத இங்கினிமேல் பொருளாயில்லை?

சோருமொரு ஏழைமனத் தனிமையுற்றால்
சொந்தத்தில் நண்பரிலை! மக்கள் சேவி
வாரியடிச குப்செல்வில்; ஞாலத்தே நான
வழுக்கியவன்! காலடியின் புழுவாய் நிற்பேன்;
ஆருயிரின் திகைப்பிடையே புகிதோர் மினனல்!
அன்பே! யென் றுன்குரலின் ஓசைகேட்கும்;
ஊருகிற உணர்வையெலாம் இயக்கிவிட்டாய்,
உற்றதுணை இங்கினிமேல் எனக்காயில்லை?

கூழிரந்து வாழ்பவனும் குடிசைக்குள்ளே
கூட்டியொரு நாயகியை வாழக்கண்டேன்;
ஏழையெனக் கேனுலகில் வாழ்க்கையென்றே (டு)
ஏர்பிடிக்க வாழ்க்கையிலை யா? நானிங்கு
வாழ்வொரு பொருளுண்டோ? என்றயிர்த்தேன்;
வாழப்பூக் கரங்களை கயினுள் நீயிருக்க
வாழுத்தம் பொருளிலை யீங் (கு) உன் அணைப்பில்
வாழ்லேனே வாழ்க்கையெலாம்? அன்பேயன்பே!

## உபகாரம்!

சிகாகோவில் ஒருவர் ஆயுதங்கள் விற்கிற ஒரு கடைக்குள் புகுந்தார்

நேரே கடைக்காரரிடம் போய் "எனக்கு ஒரு நல்ல துப்பாக்கி வேண்டும். எங்கே எடுங்கள், சீக்கிரம்!" என்றார்

"நல்ல துப்பாக்கிஎன்றால் உங்களுக்கு எப்படிப்பட்ட துப்பாக்கி வேண்டும்?

"குட்டையான ரிவால்வர் வேண்டும். உம், எடுங்கள் சீக்கிரம்" என்றார் வந்தவர்

கடைக்காரர் உள்ளே போய்க்கைக்கு அடக்கமாக ஒரு நல்ல துப்பாக்கியை எடுத்து வந்தார்

"அதில் குண்டுகளைப் போட்டு நிரப்பிக் கொடுங்கள் சீக்கிரம்!" என்றார் வந்தவர்.

"தற்கொலை செய்து கொள்ள மாட்டீர்களே" என்று சந்தேகத்துடன், கேட்டார் கடைக்காரர்.

"சேச்சே அப்படியெல்லாமில்லை என்றார் வந்தவர். கடைக்காரர் ரிவால்வரில் குண்டுகளைப்போட்டு அவரிடம் அதைத் தந்துவிட்டுப் பில் எழுதப் போனார்


அவ்வளவுதான்! வந்தவர் ரிவால்வரைக் கடைக்காரரின் மார்புக்குநேராக நீட்டி, எங்கேகொஞ்சம்கூட சப்தம் போடாமல் டிராயரிலிருக்கிற பணத்தையெல்லாம் எடுங்கள் பார்க்கலாம்!" என்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிக்கு நேர்ந்த ஆபத்து

டக்ளஸ் துரை கைத்துப்பாக்கியை நீட்டி கொல்லப்போவதாகக் கூறியதும் பிரேமா அசந்துபோனாள். குடிவெறியில் நிற்பவனிடம் ஆத்திரமுண்டுபண்ணும் விதத்தில் பேசினால் தன் உயிருக்கு ஆபத்துண்டாகுமென்பதை அப்பொழுதுதான் அவள் உணர்ந்தாள். குமுறிவந்த ஆத்திரத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு முகத்தை இரு கையாலும் பொத்திக்கொண்டு அருகிலிருந்த நாற்காலியொன்றில் அமர்ந்துகொண்டாள் பிரேமா. குடிவெறியிலிருந்த டக்ளஸ், சமரவீராவுக்குத் தன்னால்தான் மரணம் நேர்ந்ததென்னும் இரகசியத்தை அறிந்திருக்கும் பிரேமாவை கொல்லுவதா அல்லது உயிருடன் விட்டு வைப்பதா என்று ஒருகணம் யோசித்தான்.

கட்டிலுக்கடியில் ரஞ்சிதத்துடன் பதுங்கியிருந்த மனோகரன் மேலும் தாமதித்தால் ஏதாவது விபரீதம் நேர்ந்துவிடுமென்று பயந்தான். அவன் ரஞ்சிதத்தை அங்கேயே இருக்கும்படி சைகை காட்டிவிட்டு வெளியே வந்தான். டக்ளஸ் புறமுதுகு காட்டிக்கொண்டு நின்றபடியால் மனோகரனைக் காணவில்லை. டக்ளஸ் கால்சட்டைப் பையிலிருந்து ரிவால்வரை எடுத்தபொழுது ஒரு காகிதத் துண்டு கால்சட்டைப் பையிலிருந்து கீழேவிழுந்து அங்கேயே கிடந்தது. மனோகரன் அதைப் பொறுக்கி எடுத்து தனது கோட் பையில் வைத்துக்கொண்டு டக்ளஸ் துரையின் அருகில் போய் நின்றான். யோசனையில் ஆழ்ந்திருந்த டக்ளஸுக்கு மனோகரன் எங்கிருந்து வந்தான் என்பதே தெரியவில்லை. குடிவெறியில் கொவ்வைப் பழம்போல் சிவந்திருந்த கண்களால் டக்ளஸ் மனோகரனை வெறித்துப் பார்த்தான். அந்தப் பார்வையை லட்சியம் செய்யாதவன்போல் மனோகரன் பிரேமாவை வழமறித்து "என்ன பிரேமா? துரைவாள் நாடகம் ஆடுகிறாரா? அல்லது இருவருமாக சினிமாவுக்கு ஒத்திகை நடத்துகிறீர்களா?" என்று கேலியாக கேட்டான். பிரேமா கையில் புதைத்திருந்த முகத்தை நிமிர்த்தி மனோகரனை நோக்கினாள். "முன்பின் கண்டிராத இந்த ஆசாமி யார்?" என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தது. அதை அவள் முகம் பிரதிபலித்தது. பிரேமாவின் திகைப்பைக் கண்ட மனோகரன், "நான் பிரேமாவின் தாயின் சகோதரன். அதாவது பிரேமாவின் மாமா. கண்டிக்கு ஒரு அலுவலாக வந்திருந்தேன். நேரமாய்விட்டது பத்து மணிக்குமேல் பஸ் ஸோ ரயிலோ இல்லை. அதுதான் இரவை இங்கு கழிக்கலாமென்று வந்தேன்" என்று டக்ளஸ் துரையைப் பார்த்தபடி கூறிவிட்டு "ஏன் நின்றுகொண்டிருக்கிறீர்கள்? உட்காருங்களேன்" என்று கூறி அங்கிருந்த




நாற்காலி ஒன்றை துரைக்குப் பக்கத்தில் இழுத்து விட்டான்.

அங்குவந்த ஆசாமி கூறியது அத்தனையும் வெறும் புளுகு என்பது பிரேமாவுக்குத் தெரியாமலில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் அவன் அங்குவந்ததால் தனக்கு வந்த ஆபத்து நீங்கிற்று என்ற எண்ணத்தால் பிரேமா அந்த ஆசாமி கூறியதை ஆமோதிக்கவுமில்லை; ஆட்சேபிக்கவுமில்லை. பேசாமலிருந்துவிட்டாள். மனோகரன் துரை கையிலிருந்த ரிவால்வரைப்பார்த்து அதி நிஜ ரிவால்வரா? அல்லது விளையாட்டுச் சாமானா? என்று கேட்டுக்கொண்டு கையை நீட்டினான். துரை அவனிடம் கொடுக்கப் பிரியப்படாதவன்போல் கால்சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு "எனக்கு நேரமாகிறது. நான் போய்வருகிறேன்" என்று கூறிக்கொண்டு வாசல்வரை சென்று அங்கு நின்றபடி பிரேமாவதியைப் பார்த்து 'குட்நைட், பிரேமா" என்று கூறிவிட்டு காரில் ஏறிச் சென்றான்.

பிரேமாவும் மனோகரனும் சில நிமிஷங்கள்வரை மௌனமாயிருந்தார்கள். 'நல்ல சமயத்தில் வந்தீர்கள்! தாங்கள் யார்?" என்று கேட்டு பிரேமாவதி பேச்சை ஆரம்பித்தாள்.

"நான் ஒரு வழிப்போக்கன் டக்ளஸ் துரையையும் அவருடைய குணங்களையும் நான் அறிவேன். சிறிது முன்னதாக நான் இவ்வழியாக வந்துகொண்டிருக்கையில் துரை தமது காரிலிருந்து ஒரு பெண்ணைத் தூக்கி வருவதைக் கண்டு அவளைக் காப்பாற்றுவதற்காக இங்கு நுழைந்தேன்"

"அந்தப் பெண் எங்கே?"

"அவள் எங்கேயும் போய்விடவில்லை. கட்டிலுக்கடியில்தான் இருக்கிறாள்"

பிரேமாவதி எழுந்து சென்று ரஞ்சிதத்தை அழைத்து வந்தாள். மனோகரன் சிங்கள வேஷத்திலிருந்தபடியால் அவன் இன்னானென்பதை ரஞ்சிதமும் கண்டுகொள்ள முடியவில்லை. தக்கசமயத்தில் வந்த தன்னைக் காப்பாற்றியதற்காக அவள் அவனுக்கு நன்றி தெரிவித்தாள்.

மனோகரன் அவளை ஒரு ஆசனத்தில் அமரும்படி கூறி காமாந்தகாரனான டக்ளஸிடம் அவள் சிக்கிய வரலாற்றைக் கூறும்படி கேட்டான். ரஞ்சிதம் தன் கதையைக் கூறலானாள்:—

"மனோகரன் என்றொரு பிரபல இந்தியத் தலைவர் கொழும்புக்கு வந்து அங்கிருந்து கண்டிக்கு வந்திருக்கிறார். அவர் இங்கு பல இடங்களுக்கும் சென்று தோட்டத்தொழிலாளிகளிடையே சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருவதால் அவருடைய பிரசங்கங்களைக் கேட்க ஆவல்கொண்டு கண்டி ரயிலைப் பிடிப்பதற்காக ஒரு ரிக்ஷாவில் வந்துகொண்டிருந்தேன். வழியில் காரில் வந்துகொண்டிருந்த டக்ளஸ் என்னைக் கண்டான். மல்லிகைத் தோட்டத்தில் சுந்தரம் என்றொருவர் சின்னத் துரையாக இருந்தபோது நான் மல்லிகைத் தோட்டத்துக்கு ஒருதடவை சென்றேன். அப்பொழுது டக்ளஸும் நானும் அறிமுகமானோம். வழியில் என்னைக் கண்ட டக்ளஸ் காரை நிறுத்திவிட்டு நான் எங்கே போகிறேன் என்று விசாரித்தான். அவனுடைய கெட்ட சுபாவத்தை அறியாத நான் "கண்டி ரயிலைப் பிடிப்பதற்காக கோட்டை ஸ்டேஷனுக்கு செல்கிறேன்' என்றேன். "நான் கண்டிக்குத்தான் போகிறேன். நீங்கள் காரிலேயே வரலாமே" என்று இதமாக கூறினான். அவனுடைய நோக்கமறியாத நானும் அதற்கு உடன்பட்டு ரிக்ஷாக்காரனுக்குப் பணத்தைக் கொடுத்தனுப்பிவிட்டு அவனுடைய காரில் ஏறினேன்.

முதலில் நான் காரின்பின்புற ஆசனத்தில்தான் உட்காரப்போனேன். "என்னை உங்களுடைய டிரைவராக மதிக்கிறீர்களா?" என்று டக்ளஸ் கேலிச் சிரிப்போடு கேட்டுவிட்டு முன்புற ஆசனத்தில் அமரும்படி சொன்னான். அவனுடைய வேண்டுகோளைத் தட்ட முடியாமல் நான் முன்புற ஆசனத்தில் அமர்ந்தேன். கருவாக்காட்டிலுள்ள "கார்கில்ஸ்" கம்பெனியில் ஏதோமருந்து வாங்க வேண்டுமென்று கூறி டக்ளஸ் "யூனியன் பிளேஸ்" வழியாக காரை ஓட்டினான். கார்கில்ஸ் கம்பெனியை அடைந்ததும் அவன் என்னைக் காரிலேயே இருக்கும்படி கூறிவிட்டு உள்ளேபோய் சில நிமிஷங்களில் திரும்பி வந்தான. சுமார் ஆறு மணிக்கு கார் கண்டிக்கு புறப்பட்டது. வழிநெடுக அவன் யோசனையிலிருந்தான் என்னோடு அதிகமாகப் பேசவில்லை. இடையிடையே சுந்தரம் என்பவரைப்பற்றி இரண்டொரு வார்த்தை பேசினான். அவன் கொஞ்சம் குடித்திருந்தான். ஆனால் மிதமிஞ்சிக் குடித்திருக்கவில்லை காரை வேகமாகவும் நிதானமாகவும் ஓட்டிவந்தான்

பத்துப் பத்தரை மணியிருக்கும். கார் காட்டுப் பாதையில் வேகமாக வந்துகொண்டிருந்தது குளிர் கடுமையாக இருந்தது. டக்ளஸ் காரை நிறுத்திவிட்டு கைக்குட்டையை எடுத்து அதில் அவன் வாங்கிய மருந்தில் சில துளிகளை ஊற்றினான் நான் அவனுடைய செய்கைகளைக் கூர்ந்து கவனிப்பதைப் பார்த்துவிட்டு "தலைவலி சகிக்க முடியவில்லை. கொஞ்சம் ஓடிக்கோலான் மணந்தால் சரியாகிவிடும்" என்று கூறிக்கொண்டு காரை ஓட்டினான். அவன் அந்த கைக்குட்டையில் ஓடிக்லோன் ஊற்றியபின்னர் அதை ஒருதடவைகூட முகர்ந்து பார்க்கவில்லை அதை இடது கையால் "ஸ்டியரிங்வீலோடு" சேர்த்துப் பிடித்துக்கொண்டு காரை ஓட்டினான். கைக்குட்டை என்பக்கமாக இருந்ததால் அதிலிருந்து கிளம்பிய ஒருவித நெடி என் மூக்கைத் துளைத்துக்கொண்டு செல்வதுபோலிருந்தது டக்ளஸ் முகத்தை மறுபக்கமாக திருப்பி வைத்துக்கொண்டிருந்தான் கைக்குட்டையிலிருந்து கிளம்பிய நெடி மூக்கில் நுழையாவண்ணம் தடுக்க முயல்பவன்போலிருந்தது, அவன் இடப் பக்கம் திரும்பாமலிருந்தது. அவனுடைய போக்கைப் பார்த்தபொழுது அவனுடைய நடத்தையில் எனக்கு சந்தேகமுண்டாயிற்று அந்தக் காட்டுப் பாதையில் நான் என்ன செய்ய முடியும்? வாறது வரட்டுமென்று மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு பேசாதிருந்தேன். நேரம் செல்லச் செல்ல தலைவலியுண்டாயிற்று. கண் இமைகள் கனத்தன நிமிர்ந்து உட்கார்ந்திருப்பதுகூட சிரமமாக இருந்தது நான் பின்னால் சாய்ந்து உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டேன் அந்தரத்தில் பறப்பதுபோல் ஒரு உணர்ச்சி உண்டாயிற்று அதற்குப் பிறகு என்ன நடந்ததென்பதே தெரியாது. இந்த அறையில்தான் கண் விழித்தேன்'

ரஞ்சிதம் கூறிய கதை மாறுவேஷத்திலிருந்த மனோகரனுக்கு அதிசயமாக இருக்கவில்லை ரஞ்சிதம் எவ்விதம் டக்ளஸிடம் சிக்கியிருப்பாள் என்பதை அவன் முதலிலேயே ஊகித்தறிந்துகொண்டான். அவன் மனதிலிருந்த ஒருசில சந்தேகங்கள் மாத்திரம் ரஞ்சிதம் கூறியவற்றால் நிவர்த்தியாயின. பிரேமாவதி—பெண் அல்லவா? அவளுக்கு ரஞ்சிதத்தின் அனுபவம் வியப்பையும் டக்ளஸின் காமடைத்தனம் ஆத்திரத்தையும் உண்டுபண்ணிற்று. கணவனை இழந்து இன ஜனங்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டு உலகத்தாரால் விபசாரப் பட்டம் சூட்டப்பெற்று டக்ளஸ் ஒருவனே கதியென்றிருந்தவளுக்கு அவனும் தனக்குத் துரோகம் செய்கிறான் என்பதை அறிந்தபோது இருதயம் வெடித்துவிடும்போலிருந்தது. இந்தப் பூமி இரண்டாக வெடித்து தன்னை விழுங்கிவிடக்கூடாதா என்று ஏங்கினாள். டக்ளஸுக்காக தான் தனது கணவனுக்குச் செய்த துரோகச் செயல்கள் திரைப்படம்போல ஒன்றன்பின் ஒன்றாக அவளுடைய மனத் திரையில் காட்சியளித்தன. தான் செய்த பாவங்களை எண்ணி அவள் பச்சாதாபப்பட்டாள். இவ்வளவுகாலமும் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்னும்படியாக வாழ்ந்தவளுக்கு இப்பொழுது உலகியலில் வெறுப்புண்டாயிற்று. அவளுடைய இருதயம் உருகிக் கண் வழியாகப் பிரவகிப்பதுபோல கண்ணீர் ஆறாகப் பாய்ந்தது. சிறு குழந்தையைப்போல அவள்

(9-ம் பக்கம் பார்க்க)


## ஓர் அரிய தருணம்.

டிசம்பர் 20ந் திகதி முதல் ஜனவரி 5ந் திகதி வரை

### சந்திரா போட்டோ

கிறிஸ்மஸ் பண்டிகைக்கென விசேஷ ஏற்பாடுகளுடன் எங்கள் வாடிக்கைக்காரர்களின் அபிமானத்திற்குப் பதினைந்து தினங்களுக்கு விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| போஸ்ட்கார்ட். | 3 கொப்பிகள் | ரூ. | 5-00 |
| கபினட் | 3 | ,, | ரூ. 10-00 |
| 8½ x 6½ | 3 | ,, | ரூ. 15-00 |
| 12 x 10 | 3 | ,, | ரூ. 25-00 |

அவசர பாஸ்போட் படங்கள், வெளியில் வந்து படம் எடுத்தல், வாழ்த்துக் கார்டுகளில் படம் பதித்தல் வர்ணக் கலர் வேலைகள், சினிமா சிலைட் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு: **சந்திரா போட்டோ**

(GEVAERT) ஏஜண்ட் விநியோகஸ்தர்கள்.

(Front Street) 68, பூந்தோட்ட ரோடு,

போன்: 5737. கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தொழிலாளரின் வளையல் போராட்டம்

## தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கை எடுக்கிறது

கண்ணாடி வளையல் அணியும் போராட்டம் புதிய கட்டத்தை அடைந்திருக்கிறது. எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த அல்கொல்லை தோட்டத்திலுள்ள மூன்று டிவிஷன்களிலும் கண்ணாடி வளையல் அணிந்து வரும் பெண்களுக்கு வேலை கொடுப்பதில்லையென்று தோட்டத் துரை ஒரு விபரீத உத்தரவைப் போட்டார். வளையல்கள் நொருங்கி கண்ணாடித் துண்டுகள் தேயிலையுடன் கலந்துவிடுகின்றனவாம். இத்துரை நடத்திய கண்மூடி ஆராய்ச்சிகளினால் கண்டுபிடிக்கப்பட்ட சித்தாந்தம் தான் இது.

தோட்டங்களில் இரத்த வியர்வை சிந்திப் பாடுபடும் பாட்டாளி பெண்களுக்கு கிடைக்கும் ஊதியம் உடலோடு உயிரைப் பிணைப்பதற்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்குவதற்குக்கூட போதாமலிருக்கிறதே! இந்த லட்சணத்திலே தங்க வளையல்கள் அணிவதற்கு அவர்களுக்கு முடியுமோ? வேலை பலியாக இருக்கும் கண்ணாடி வளையல்களைத்தானே அவர்கள் வாங்கி அணிய முடியும்? கண்ணாடி வளையல்கள் அணியக் கூடாதென்று சட்டமியிடும் அந்த நவீன பிரகஸ்பதி அந்த ஏழைப் பெண்களுக்கு தங்க வளையல்களை வாங்கிக் கொடுக்கலாமல்லவா?

இந்த விபரீத உத்தரவுக்குப் பணிந்து விடவில்லை தொழிலாளிப் பெண்கள். இதற்கு முன்பு ஒருசில பெண்கள்தான் கண்ணாடி வளையல்கள் அணிந்திருந்தார்கள். இப்பொழுது அத்தோட்டத்திலுள்ள பெண் தொழிலாளர்கள் அனைவரும் அணியத் தொடங்கி விட்டார்கள். தோட்ட நிர்வாகம் பிடிவாதத்தைத் தளர்த்தவில்லை. வளையல்கள் அணிந்து கொண்டு வேலைக்குவந்த 184 பெண் தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்க மறுத்துவிட்டார் தோட்டத் துரை. வளையல் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இதனை ஆட்சேபித்திருப்பதோடு, இது விஷயமாக உடனே ஒரு பஞ்சாயத்து கூட்ட வேண்டுமென்று தொழில் கமிஷனரைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

வேலை கொடுக்காத நாட்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் கோருகிறது.

மற்றொரு தோட்டத்திலும் ஒரு கணக்குப்பிள்ளை இந்த விபரீத திட்டத்தை அமுல்நடத்த முயற்சி செய்தாரென்றும் தொழிலாளரிடம் அவருடைய ஜம்பம் சாயவில்லை.

### வாரம் நாலு நாள் வேலை

களுத்துறைஜில்லாவிலே சில தோட்டங்களில் வாரம் 4 நாட்களுக்கு மட்டுமே வேலை கொடுக்கப்படுவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ரப்பர் பால் வெட்டும் தொழிலாளர்களுக்கு மட்டும் வாரத்தில் எல்லா நாட்களுக்கும் வேலை கொடுக்கப்படுகிறதெனினும், இதர வேலைகளைச் செய்கின்ற தொழிலாளர்களுக்கு அவ்வாறு வாரம் முழுவதும் வேலை கொடுக்கப்படுவதில்லை.

தோட்டமுதலாளிகளின் இச்செயலை வன்மையாகக் கண்டிக்கும் இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் வெளியிலிருந்து வந்து வேலை செய்பவர்களுக்கு "கண்ட்ராக்ட்" கொடுக்கும் முறை உடனடியாக நிறுத்தப்பட்டு தோட்டங்களில் நிரந்தரமாக வேலை செய்துகொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வாரம் 6 நாட்களிலும் வேலை கொடுக்கப்பட வேண்டுமென்றும், வேலை கொடுக்கப்படாத தினங்களுக்கு முழுச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் தோட்ட முதலாளிகள் அனைவருக்கும் ஆக்ஞை அனுப்புமாறு தொழிற் கமிஷனரை கேட்டுக்கொண்டிருக்கிறது.




### மொகமதியா தோட்டத்தில்

இலங்கை இந்திய காங்கிரஸ் களுத்துறை ஜில்லா கமிட்டியின் ஆதரவில் கடந்த 23-11-52 பிற்பகல் 4 மணியளவில் மொகமதியா தோட்டப் பாடசாலையில் மேற்படி தோட்டத் தொழிலாளரின் பொதுக் கூட்டமொன்று ஜில்லா கமிட்டி தலைவர் திரு கே. ஆர். கருப்பையா தலைமையில் நடைபெற்றது.

ஜில்லா கமிட்டி உபதலைவர் திரு ஐ வி ஐயன் கங்காணி, கௌரவகூட்டுக்காரியதரிசி திரு என் பழனியப்பா பிரதிநிதி திரு ஆர் எஸ் நாகலிங்கம் ஆகியோர் பேசிய பின்பு தோட்டக் கமிட்டி உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

### நமுனுகொல்லையில் பொதுக் கூட்டம்

நமுனுக்கொல்லை டெனிஸ்கிளப் ஜங்ஷனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் பதுளை ஜில்லா கமிட்டி பொதுக் காரியதரிசி திரு ஏ. கே. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. சுமார் 3000க்குமேற்பட்ட தொழிலாளர்கள் சமூகமளித்திருந்தனர்.

கந்தஹேனத் தோட்டத் தொழிலாளர் தகராறு சம்பந்தமாக தோட்ட நிர்வாகம் அனுஷ்டித்துவரும் கொள்கையின் விளைவாக தொழிலாளர்கள் அனுபவித்துவரும் சொல்லொணாக் கஷ்டங்களையும் தொழில் இலாகா தொழிலாளர் காங்கிரஸ் இவைகள் எடுத்துக்கொண்ட நியாயபூர்வமான சகல நடவடிக்கைகளையும் நிராகரித்துவிட்டதின் கொடுமதியையும் இலங்கை இந்திய காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு கே. ஜி. எஸ் நாயர் தெளிவாக விளக்கிக் கூறினார்.

# மோத்தாவை நினைவு கூருவோம்

டிசம்பர் 8ம் திகதி மோத்தாதினம் பாட்டாளி மக்களின் உற்ற தோழன் மறைந்த நினைவு தினம். மலை குலைந்தாலும் நிலை குலையாத திட நெஞ்சப்படைத்த தொழிலாளர் தலைவனின் அமரதினம்.

நாற்கோணங்களிலும் அரசாங்க-முதலாளித்துவக் குப்பல்களால் நெருக்கி ஒடுக்கப்பட்ட சோதரர்கள் இந்த மகத்தான தினத்தை மனதிலிருத்திக்கொண்டு புத்துணர்ச்சியும், புதுஊக்கமும் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. அரசியல் ரீதியில் ஒருபக்கம் இலங்கை இந்தியா என்ற பாகுபாட்டைப் புகுத்தி பாட்டாளி மக்களை ஒடுக்கப் பார்த்த செயல் ஒருபுறமிருக்க-பொருளாதார ரீதியிலையும் இதே துவேஷத்தை அரசாங்க-முதலாளித்துவ கூட்டு இயக்கம் புகுத்தப் பார்த்தது. இது போன்ற தருணங்களிலெல்லாம் திரு மோத்தா போர்க்கள வீரனைத் தோன்றி தாம யுத்தம் நடத்தினார். திரு மோத்தாவின் முதுமைப் பருவத்தில் அவர் உடலிலே உரமில்லாவிட்டாலும் உள்ளத்தில் வீரமிருந்தது. உணர்ச்சியிலே வீரமிருந்தது. ஊக்கத் தலை-வேலைநிறுத்த ணிலே வீரமிருந்தது.

திரு மோத்தா தொழிற்சங்க இயக்கத்தில் குதித்தது முதல் பாட்டாளிகளின் கஷ்டங்களை நீக்க-பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் அவர்களை முன்னேற்றுவதற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

உருளிவெள்ளிபோன்ற பிரச்னைகள் மலிந்த தொழிலாளர் போராட்டங்களிலே திரு மோத்தா, வில்லின் விஜயனாக-விஜய காண்டீபனாக நின்று வெற்றிபெற்றார் என்பது மிகையாகாது. பாட்டாளி மக்களின் போராட்டத்திற்காக அவர்களின் பெரிய அங்கத்துவ ஸ்தாபனமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் வகுத்து நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் அனைத்திலும் திரு மோத்தா பெரும் பங்கு எடுத்துக்கொண்டார் என்பதில் சந்தேகமில்லை.

தோட்டங்களில் நடந்த ஆள் குறைப்பு-கூலிவெட்டு-திடீர் வேலைநீக்கம் போன்ற எண்ணற்ற பிரச்னைகளில் தலையிட்டு சமரசப் பேச்சுவார்த்தைகளில் அவர் கலந்துகொண்டு போராட்டம் நடத்தினார். பலவேறு வகையில் தொழிலாளருக்கு சேவை செய்த இப்பெரும் தியாகிக்கு நாம் தகுந்த மரியாதை காட்ட வேண்டும்.

கோர்ட்டிலே பிடிவாத குணமுள்ள மோத்தாவை அவரது அரசியல் தொழிற்சங்க எதிரிகளும் மனமுவந்து பெரும் குணசீலராக பாராட்டினார்கள். மரியாதை காட்டினார்கள். தொழிலாளர் மட்டுமின்றி அரசாங்கமும் முதலாளிகளும் கூட மோத்தாவின் உண்மைத் தொண்டை உணர்ந்து வாழ்த்தினார்கள்.

புயல் வீசும் அலைகடலின் மத்தியிலே தொழிலியக்கம் என்ற கப்பலைத் திறமையுடன் காப்பாற்றி இழுத்து வந்த மாலுமி ஒருநாள் திடீரென மறைந்தார்.

திடுக்கிட்ட தொழிலாளி வர்க்கம் திசை தெரியாது தடுமாறியது. கப்பல் ஏனைய மாலுமிகள் முடிந்தவரை செலுத்தினர் ஆயினும் மோத்தா என்ற மாலுமி வருடம் ஒருமுறை நம் மனத்திலே புகுந்து-பாட்டாளிகளின் லட்சியப் போராட்டத்திற்கு ஒரு ஆதர்சமாக-கலங்கரை விளக்கமாக-விளங்குகிறார்.

அவருடைய மறைவு தொழிலியக்கத்திற்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்றபோதிலும் டிசம்பர் 8ம் திகதி அவரது நினைவு நாளைக் கொண்டாடுவதன் மூலம் போராட்டத்திற்கு ஓர் புத்துணர்ச்சியும்-புதிய சக்தியும் பெறுவோமாக. தொழிலியக்கத்திற்கு அவர் அர்ப்பணித்த சேவையானது குன்றின் மேலிட்ட தீபமாக-நந்தாமணி விளக்காக பிரகாசிக்குமாக.

வாழ்க மோத்தா நாமம்!

வாழ்க தொழில் இயக்கம்!


இந்தியாவுக்குப் போகும்பொழுது ஓர்

**ஒட்டக மார்க்**

குடையை வாங்கிச் செல்லுங்கள்




ரெஜிஸ்டர் நிர். 12336.

நீடித்த உழைப்பிற்கும் உறுதிக்கும் உத்திரவாதம்.
நீங்கள் கொடுக்கும்பணத்திற்கு பெறுமதிவாய்ந்தது

ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலருக்கும் தேவையான குடைகளைத் தெரிவு செய்துகொள்ளலாம்.

இலங்கையில் எல்லோரும் விரும்புவது ஒட்டகம் மார்க் குடைகளே!

எங்களிடம் புதிதாய் இறக்குமதி செய்யப்பட்ட பார்க்கர் ஜூனியர் பென் சகாயமான விலைக்குக் கிடைக்கும்

உங்களுக்கு வேண்டிய ஜவுளிகளுக்கு எங்கள் மாளிகைக்கு ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

வியாபாரிகளுக்கு விலையில் சலுகை உண்டு.

**ஜக்கியா டிரேப்பரி ஸ்டோர்ஸ்**

6, சைனாவீதி, கொழும்பு 11. போன்: 5113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரு-டட்லி சந்திப்பு நடைபெறுமா?

## அம்மாதிரியான திட்டம் கிடையாதென்கிறார் இந்தியப்பிரதமர்

### யு. என். பி. தலைமையின் புதிய அரசியற் தந்திரம்

இலங்கை இந்தியர்களுக்குச் சாதகமாக பிரிவிக் கவுன்ஸிலில் ஒரு வழக்கில் தீர்ப்பளித்தது. இதனைக்கண்டு சினம்கொண்ட யு என். பி ஆட்சியாளர், தங்களின் திட்டத்தைக் கவிழ்ப்பதற்கு உயர்தர நீதி மன்றத்திற்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று அறைகூவல் விடுத்து புதிய மசோதா ஒன்றை சட்டசபைகளில் நிறைவேற்றி 'ஜாம் ஜாம்' என்று வெற்றி முரசு கொட்டிவிட்டனர்.

இதன்மூலம் இலங்கை இந்தியர்களுக்கு குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்குப் புதிய ஒரு விலங்கு மாட்டப்பட்டுவிட்டது; விலங்கொடித்து விடுதலை பெற இ. இந்தியர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

### நேருஜீயின் மறுப்பு

நேருஜீயும் டட்லியும் சந்தித்து சமரச முடிவு காணும்வரை எத்தகைய நடவடிக்கையும் எடுக்கக்கூடாதென்று இ. இ காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு அறிக்கை விடுத்திருக்கிறது. இரு தேசப் பிரதமர்களும் நிச்சயமாக சந்திப்பார்களா, அந்த சந்திப்பு எப்பொழுது எங்கே நடைபெறும் என்று கேட்டால், அதற்கு எந்த ராஜதந்திரியாலும் பதில் சொல்ல முடியாது. பிரதமர் டட்லி நேருஜீயைச் சந்திக்க ஆவலுடனிருப்பதாகப் பாராளுமன்றத்தில் கூறினார். லண்டனுக்குப் போகும் வழியில் பம்பாயில் வைத்தும் பத்திரிகை நிருபர்களிடம் மீண்டும் அதையே கூறி வைத்தார். ஆனல் அம்மாதிரியான திட்டம் எதுவும் கிடையாதென்று நேருஜீ மறுதினமே டில்லி மக்கள்சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது தெளிவாகக் கூறிவிட்டார். ஆகவே இரு தேசப் பிரதமர்களின் சந்திப்பு நிச்சயம் என்ற நிலைமை மாறிவிட்டது. இந்தியப்பிரதமரைத் தான் சந்தித்துப் பேசப்போவதாக யாரையோ திருப்திபடுத்தும் நோக்கத்துடன் திரு டட்லி கூறியதைத் தவிர இது சம்பந்தமாக இதுவரை இரு தேச அரசாங்கங்களிடையே கடிதப் போக்குவரத்தோ பேச்சுவார்த்தையோ நடைபெறவில்லை என்பது நேருஜீ மக்கள் சபையில் கூறியதிலிருந்து தெளிவாகிறது.

### ராஜதந்திரமா?

பிரதமர் டட்லியின் பேச்சிலிருந்து அவர் நிச்சயமாக நேருஜீயைச் சந்திப்பாரா என்பதை நாம் கூறுவதற்கில்லை. அந்த நோக்கம் இருந்திருக்குமாயின், இரவோடு இரவாக பிரஸ்தாப மசோதாவை சட்ட சபையில் நிறைவேற்றிருக்க வேண்டியதில்லையல்லவா? பண்டித ஜவஹர்லால் நேருவுக்குப் புகழ்மாலை சூட்டி, பாரத நாட்டை உச்சாணிக் கொம்பில் ஏற்றி வைத்து, பாரதத் தலைவர்களே எங்களுக்கு வழிகாட்டிகள் என்று பாமாலை பாடி, பின்னர் அந்த வார்த்தைஜாலங்களில் மறைந்து நின்று இ. இந்தியர்களின் உரிமைகளுக்கு உலைவைப்பதே இந்நாட்டுச் சிங்கள தர்பாரின் தலைசிறந்த ராஜதந்திரம். இப் பாரம்பரியத்திறகேற்பவே பிரதமர் டட்லி பிரஸ்தாப மசோதா விவாதிக்கப்படும்போதும் பாராளுமன்றத்தில் பேசினர், நேருஜீயை வாயார வாழ்த்தி அவரைச் சந்திக்கப்போவதாகவும் கூறி, பின்னர் மசோதாவை நிறைவேற்றி வைத்தார் இதுதான் யு. என். பி தலைவர்களின் அரசியல் தந்திரம் மசோதாவை நிறைவேற்றுவதற்காகவே நேருஜீயைச் சந்திக்க ஆவலாயிருப்பதாக அவர் கூறிக்கொண்டார் என்றே கருத வேண்டியிருக்கிறது. பம்பாயிலும் நிருபர்களின் சரமாரியான கேள்விகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காக அவர் நேருஜீயை சந்திக்கப்போவதாக கூறினர்.

### வழிகாட்டுக!

இக்காரணங்களை முன்னிட்டு இலங்கை-இந்தியப் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்காக இரு தேசப் பிரதமர்களும் சந்திக்கப்போகிறார்களென்று கூறுவது வெறும் ஆருடமாகத் தான் இருக்க முடியும். ஆதலால் நிச்சயமில்லாத பிரதமர்களின் சந்திப்பை பிணையாகக்கொண்டு இ. இந்தியர்களின் பிரச்னையை நிர்ணயிக்க முயற்சி செய்வது முற்றிலும் தவறாகும்.


ஆகவே இன்று கூடுவதாகவிருக்கும் காங்கிரஸ் காரியக கமிட்டி நிலைமையை ஆதியோடந்தமாகப் புணராலோசனை செய்து, இ. இந்தியர்களுக்கு சோதனைக்கு மேல் சோதனை ஏற்படுகின்ற இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலே சரியான முடிவு செய்யும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.


# இரும்புப்பணப் பெட்டிகள்

லண்டன் நகர ஜோண்டான் லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை.

1795-ம் ஆண்டில் ஸ்தாபிதம் - மிகப் பழைய ஸதாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை

## டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.

ஆபீஸ் பொருட்கள் விற்பனை பகுதி

18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை கொழும்பு

போன்: 2301


### 15 கோடி புத்தகங்கள்



கடந்த 16 ஆண்டுகளில் புகழ் பெற்ற பெங்குவின் வெளியீடுப் புத்தகங்களில் 150,000,000. பிரதிகள் விற்பனை செய்யப்பட்டன பெங்குவின்கம்பெனியில் புத்தகங்களை விற்பனைசெய்யும் இலாகாவைப் படத்தில் காண்க

கடிதம்

## யோகி சுத்தானந்த பாரதியார்

வேறுபட்ட அபிப்பிராயங்களைத் தெரிந்த கொள்ள வேண்டியது நமது கடமை இந்தக் கடமையையும் உரிமையையும் உணர்ந்து சுதந்திரன் சேவை செய்வது எல்லோரும் அறிந்த விஷயம் சுதந்திரன் தினசரி நிறுத்தப்பட்ட பிறகு சுதந்திரன் வழியாகத்தான் தினசரி பத்திரிகைகளில் இல்லாத பல சமாச்சாரங்களையும் எதிர் அபிப்பிராயங்களையும் வாரந் தவறாமல் நாங்கள் படித்து வருகிறோம்

நான் 16-11-52 சுதந்திரனைப் படித்தபோது செபமறியாடு மாதிரி மற்ற பத்திரிகைகளைப் போல ஆமாச்சாமி போடாமல், சுத்தானந்தரைப் பற்றி எழுதயிருந்ததை படித்து சந்தோஷப்பட்டேன். பிறகு இந்த விஷயம் வந்த தமிழ் நாடு இதழ்களை வாங்கிப் படித்தேன் மற்றவற்றைப் பற்றி எல்லாம் வாரா வாரம் எழுதும் ஒரு நிருபர் சுத்தானந்தர் பற்றியும்எழுதத்தானே வேண்டும்? இது பிரசாரமா?

இதை மறுத்த திரு மு சுப்பராமன 30-11-52 'சுதந்திரன்' இதழில் எழுதியிருப்பதையும் படித்தேன். சுத்தானந்தரைக் கண்டித்து நவாலியூர் சைவ மகாசபையார் ஐப்பசி 25ல் வெளியிட்ட "கலவைச் சரக்கு' யாழ்ப்பாணம் வேதாகம சைவ சித்தாந்த சபை பிரசுரித்த "சைவ சமயமுயா போகவேண்டுமா?" சண்டிருப்பாய் சைவ மகாசபையாரின் "அந்தரக் கோட்டைகள்" என்ற பிரசுரங்களை திரு மு. சுப்பராமன் அவர்கள் பார்க்கவில்லையோ? நவாலியூர் க சோமசுந்தரப் புலவர் அவர்கள் சுத்தானந்தரிடம் பட்டம் வாங்க மறுத்திருப்பதை அவர் அறியவில்லையா? "அவர்கள புலவர் மணிப் பட்டங் கொடுப்பதும் புலவர்கள் அதைப் பெற்றுக கொள்வதும் கருத்தில்லாச் செயல்களாய் சான்றோர்க்கு நகைப்புத் தருவனவாகும்" என்று ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தாருக்கு அவர் கடிதம் எழுதியிருக்கிறார் என்பதையும் இங்கேகுறிப்பிட விரும்புகிறேன்.

கொலை, கற்பழித்தல் முதலியவைதான் முக்கிய செய்திகள் என்று 'தமிழ் நாடு" நிருபர் எங்கே சொல்லியிருக்கிறார்? அன்பர் சுப்பராமன் அவர்கள் ஏதோ பத்திரிகைகளுக்குப் பரிந்து அவர்களுக்காக எழுதியனுப்பியதுபோல தெரிகிறது. இல்லாவிட்டால் இலங்கையிலுள்ள பத்திரிகைகளின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதற்கு ஏன் இவ்வளவு 'பொருமை?' இந்தியாபோல ஈழத்திலும் ஒரு பத்திரிகை கமிஷன்' ஏற்பட்டால் எல்லா ஊழல்களும் வெட்டவெளிச்சமாகிவிடுமே!

சுத்தானந்தர் நடை என்று ஒரு தனி நடை இருப்பதாக அவர் சொல்லுகிறார். நூலுக்கு நூல் மாறுபட்டு எழுதுவது இந்த நடையின் லட்சணங்களில் ஒன்றுபோலும். நூலில் பாதிக்குமேல தன்னைப்பற்றிப் பாராட்டி எழுதிக் கொள்வது சுத்தானந்தர் நடையின் தனி அம்சமா?


போன மாதம் சுத்தானந்தர் பொரளை ஒய் எம். பீ. ஏ. என்னும் பௌத்த சபாவில்பேசினபோது நாங்கள் கேட்டோம். புத்த மதம் பற்றித்தான் பேசினர். பேசின விஷயமோ இந்து சமயம் இந்து மதத்துக்கு பௌத்தசம் என்று பேர் வைக்கவேணுமென்றார். பிறகு சர்க்கலதயா வைதிபகாதனைப்பற்றி. இடைக்கிடை கதைத்த அவருக்குப் புகழ்மாலை சூட்டினர் கடைசியாக ஒருவர் கேள்வி கேட்ட போது கோபமாக எழுந்தார். அதற்குச் சரியாகப் பதில் சொல்லவும இல்லை. மானிப்பாயில் ஒருவர் வந்தனோபசாரம் சொல்லும்போது அடிகள்

[12-பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தைப் பிரசாரம் செய்வதற்கு உகந்த வழி

## பள்ளிகளைப் பரிபாலிப்பவரிடம் நேர்மை இருத்தல் வேண்டும்




(அல்-ஹாஜ் வி. எம். ஷம்சுத்தீன்)

"அல்லா உடைய பள்ளிகளைப் பரிபாலனம் செய்ய, இணை வைத்து (ஷிர்க்) இறைவனை நிராகரிக்கும் அவர்களுக்கு உரிமை இல்லை. எவர்கள் அல்லாவையும் இறுதி நாளையும் விசுவாசித்து தொழுகையையும் கடைப்பிடித்து ஏழை வரியும் கொடுத்து இறைவனைத் தவிர மற்ற எவருக்கும் பயப்படாமல் இருக்கிறார்களோ அவர்கள்தான் அல்லா உடைய பள்ளியைப் பரிபாலனம் செய்யக் கூடியவர்கள் நேரான வழியில் இருப்பதாக நம்பத்தக்கவர்கள்" (அல் குர்ஆர் 9-17-18)

இறைவனின் ஏகத்துவம், அவனுடைய சட்டதிட்டங்கள், 'ஈமான்' என்ற பலமான நம்பிக்கை ஆகியவைகளைப் பண்டைக்கால முஸ்லிம்கள் கடைப்பிடித்து ஒழுகினர் அதன் காரணமாகவே இன்று உலகில் எல்லாப் பாகங்களிலும் இஸ்லாம் ஒரு கலங்கரை விளக்காகயிருந்து வருகிறது. மனித சமூதாயத்தின் அல்லது மானிட வாழ்க்கையின் வெற்றி ஒரு அரசியல் கொள்கை அல்லது மதக்கொள்கைக்காக ஒரு இஸ்லாமிய எழுத்தாளனை பணங்கொடுத்துத் திருப்புவதுபோல் அக்கால முஸ்லிம்களை விலைக்கு வாங்க முடியாது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எந்தப் பணக்காரர்களாலும், மன்னர்க்கு மன்னர்களாலும் திருப்ப முடியாது போய்விட்டது. தொழுகைக்கு வாருங்கள் என்று முதலில் 'ஆதான்' சொன்ன ஹஸரத் பிலால் அவர்களை எந்த சக்தியாலும் திருப்ப முடியக் கூடவில்லை. (பைத்துல் முகத்திஸ்) ஜெருசலத்தை வென்ற சுல்தான் ஸலாஹுத்தீன் ஐபுரியை கிறிஸ்தவர்கள் 'குருசேட்' யுத்தத்தில் பலமாக எதிர்த்தார்கள். முடிவில் தோல்வி கண்டு புறங்காட்டி ஓடினர். அவரது வெற்றிக்கு நம்பிக்கையே காரணமாயிருந்தது. இஸ்லாமியக் கலைப் பண்புக்காகப் பாடுபடுகிறவன் முதலில் இறைவன் மீது மிக நம்பிக்கை வைக்கவேணடும். எனவேதான் அவன் கலையறிவுத் துறையிலும், செயலிலும் சரியான வழிகாட்டியாக யிருப்பான். இறைவன் நம்பிக்கை பலமானவுடன் அவன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது செயல் முறைகளை அநுட்டிக்கத் தொடங்கிவிடுவான் தெய்வ பக்தியும், உண்மை உணர்ச்சியும், ஒரு நல்ல முஸ்லிமுடைய குணாதிசயங்கள் பத்திரிகைகளில மறுமலர்ச்சியைப்பற்றியும் முஹம்மது நபி அவர்கள் பிறந்த தினத்தில் அவர்களைப்பற்றியும் எத்தனையோ ஆசிரியர்கள் பேசுகின்றனர். அவர்களுள் பலர் தங்களையே திருத்திக் கொள்ளாதவர்கள். "நீங்கள் செய்யாததை ஏன் பிறருக்குச் சொல்கிறீர்கள்?" என்று குர்ஆன் கூறுகிறது மதப் பீப்பாயில் மூழ்கி வண்டுகளைப்போல் அதில் மயங்கிக் கிடக்கும் ஒருவன் நபிகள் நாயகத்தைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமென்னயிருக்கிறது? ஆசிரியர்களில் சிலரும் சில மௌல்விகளும் இஸ்லாத்தை அதிகம் பிரசாரம் செய்யப் பணமில்லாத சூழ் நிலையே காரணம் என்கின்றனர். ஒருவாறு நானும் இதை ஒத்துக் கொள்கின்றேன். நம்பிக்கையும், தியாகமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்மாதிரி ஆகியவைகளை கடைப்பிடித்தால் ஏழையாகவந்த இஸ்லாம் ஏழ்மைத் தனத்திலிருந்துகொண்டே வெற்றிபெற்று விடும்

மானிடர் முன்னேற்றத்தை லக்ஷியமாகக் கொண்டதே இஸ்லாம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "எவனுடைய நாவினாலும் எழுத்தாலும் மக்கள் க்ஷேமமடைகின்றார்களோ அவனே உத்தமன்" என்றுகூறியுள்ளார்கள் மானிடருக்குச் செய்யும்சேவை இறைவனுக்குச் செய்வதாகும். ஒரு மனிதன் சமூதாய அரசியல் பொருளாதார விஷயங்களில் எதைச் செய்ய வேண்டும்? எதைச் செய்யக் கூடாது? என்று எடுத்துக்கூறி மனித சமூதாயம் முன்னேற வழிவகை கூறுகிறது. பணக்காரப் பேதைகள் பலர் சுயநலங்கருதி மக்களை இரு கூறுகப் பிரித்து-அதாவது-ஏழை பணக்காரன்-என்ற பேதங்காட்டி-ஏழைகளை வஞ்சித்து வருவதை இஸ்லாம் சற்றும் அநுமதிக்கவில்லை: ஏழைகளுக்கு உணவிற்கு வழி வகுத்துக் காட்டிய "காரல் மார்க்ஸ்" பிறக்க ஆயிரமாண்டுகளுக்கு முன்னரே முஹம்மது நபி ஒரு பெரிய பொதுவுடமைவாதியாக இருந்தார் அவர் உலக மக்களனைவருக்கும் வழிகாட்டக் கூடியதும், மனித வாழ்க்கையின் சகல அம்சங்களையும் தெளிவாகக் கூடியதுமான சட்ட திட்டங்களை வகுத்திருக்கின்றார் அவரது வாழ்க்கை ஒரு தேச பக்தனுடைய வாழ்க்கையைப்போலன்று. இதை நான் அட்டாளச்சேனை அரசாங்கப் பயிற்சிக் கல்லூரியில்தெளிவாக எடுத்துச் சொன்னேன்.

செல்வந்தனிடம் கருணையும், ஏழைகளிடம் செல்வமும் இல்லாத நிலைமையே இன்று உலகில் எல்லாம் சூழ்ந்து கொண்டு போகிறது. எனவே இன்றைய நிலைமையில், பள்ளிவாசல்கள்மூலமாக இஸ்லாமியப் பிரசாரத்தை ஆரம்பிக்கலாமென்பது எனது திடமான நம்பிக்கை. முதலாவது குர்ஆனுக்கும், ஹதிஸுக்கும் முரண்படாதநிலைமையில் இந்தியாவிலும் இலங்கையிலும் வக்புச் சட்டம் செய்ய வேண்டும். முடியுமானால் "ஜக்காத்" சட்டமும் செய்து, வருமான வரி வசூலிப்பதுபோல் வசூலித்து அதையும் ஏழை முஸ்லிம்களுக்கு "மொஹல்லா"வாரியாகக் குர் ஆன் சட்டப்படி விநியோகிக்கலாம் பிற்கூறியது முடியுமென்று நம்பிக்கை இல்லை. இது இஸ்லாமிய நாடுகளில் சாத்தியமாகலாம் அங்கும் பாரூக் மன்னன்போன்றவர்கள் இருந்தால் சாத்தியமாகாது இன்று இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள பள்ளிகளுக்கு முத்தவல்லியாக இருப்பவர்கள் பலருக்கு இஸ்லாத்தைப்பற்றி அக்கறை கிடையாது. பலர் தொழாதவர்கள். மேற்கூறப்பட்ட குர்ஆன் வாக்கியத்துக்கு முரண்பட்டவர்கள் சுயநலக்காரர்கள் பொதுச் சொத்தைக் கொண்டு தன் குடும்ப வாழ்க்கையை "டிரஸ்ட்டி" என்றபோர்வையில் நடத்துகிறவர்கள். (இங்கு பள்ளி என்று கூறுவது முஸ்லிம்கள் தொழும் பள்ளிகளைப்பற்றியே. "தக்கியா" "ஸாவியா" அங்கும் நடக்கும் ஊழல்கள் ஆண்டுக்கு ஒருமுறை வந்து தங்கிப் போகும் சாதுக்கள் இவர்களைப்பற்றிப் பிரிதொரு சமயம் எழுதுவேன்) இவர்களை எல்லாம் டிரஸ்ட்டி பதவியிலிருந்து முதலில் நீக்கிவிட வேண்டும். குர்ஆன் சட்டத்துக்கு இணங்க நேர்மையாகப் பள்ளி நிர்வாகத்தை நடத்தக்கூடிய உத்தமர்களும் சிலருண்டு. பள்ளிவாசலுக்குச் சேர்ந்த இடத்தில் நாடகசாலை, நடனசாலை, பாவைக்கூத்து, பாவையர் கூத்து, மதுபானச் சாலை முதலியன இருக்கக்கூடாது. அல்லாவை தியானிக்கும் பள்ளிவாசல்களில் கொடி கூடு தூக்கும் மடமை இருக்கக்கூடாது. சில பள்ளிகளுக்குள் சில மேதைகள் சமாதியாகியிருப்பதாகவும் அவர்களுக்காகவே கொடி தூக்குவதாகவும் மட்டக்களப்பில் ஒரு முஸ்லிம் சொன்னார். அந்த சம்பிரதாயம் இஸ்லாத்தில் அறவே கிடையாது. 'தினகரனில்' முஸ்லிம் நண்பர் ஒருவர் எழுதியதுபோல் ஐதிகமா? என்னவோ! பள்ளிவாசலகள் தோறும் தொழுகிறவர்கள் நன்மைக்காகவும் அவர்கள் [illegible] [illegible] அறிவு பெறத் தகுந்த நல்லறிவைப் பெற்றுக்கொள்ளுவான் வேண்டியும் நல்ல நூல்களைச் சேர்த்து வைக்க வேண்டும். பள்ளிவாசல்களுக்கு கத்திபாக வருகிறவர்கள் பெரும்பாலும் "லெப்பைகள்" இவர்கள் சில விஷயங்களை மாத்திரம் தெரிந்து "லெப்பை" வேலை செய்து, ஓய்வு நேரங்களில் மாஇலையில் "அஸ்மா" எழுதி நூல் கட்டி மந்திரம் ஜெபிக்கிறவர்கள். இவர்களாலேயே பள்ளிவாசல்களின் சிறப்பும், இஸ்லாத்தின் சிறப்பும் அணைந்து வருகிறது. உலகிலுள்ள மொழிகளில் சிறப்பான மொழி அறபிதான். இவர்கள் செய்யும் பேதமைத்தனத்தால் இந்த அறபிமொழியைப் படிப்பதற்குக்கூட பணக்காரன் வீட்டுப் பிள்ளைகள் வெட்கப்படுகிறார்கள். இலங்கை சர்வகலாசாலையில்கூட அறபிப் போதனை முறை எடுக்கப்பட இருந்தது. ஸர் ராசிக் பரீது அவர்கள் செய்த முயற்சியால் இது நடைபெறவில்லை. கூடுமானவரை நல்ல சம்பளம் கொடுத்து தகுந்த மௌல்விகளை, ஆலிமகளை, பேஷ் இமாமாக நியமித்தல் வேண்டும். அவர்களுக்கு இஸ்லாமியக் கடமைகளுடன் சரித்திரம், அரசியல் தெரிந்து, இஸ்லாத்தைப்பற்றி, மேமன் பள்ளிவாசல், கொழும்பு மருதானைப் பள்ளி, கும்பனித் தெரு பள்ளிவாசல்கள் இன்னும் சில பள்ளிகளில் நடைபெறுவதுபோல் குத்பா பிரசங்கத்தின்மூலமாக இஸ்லாத்தைப்பற்றிய பிரசாரம் செய்ய வேண்டும். அரசியலும் மதமும் கலந்ததுதான் இஸ்லாம். "முன்னேற்றத்தைக் கருதும் ஒவ்வொரு மூஸலிம் கூட்டத்தினரும ஜக்காத்தையும் பாதுகாப்பான பைத்துல்மாலையும் திரும்பவும் உயிர்ப்பிக்க வேலை செய்ய வேண்டும்" என ஒருசமயம் குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த முஹம்மது மார்மடியூக் பிக்தால் கூறினார். அவர் பெரிய மேதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டவர்.

பனு அப்பாசியாக்கள் காலத்தில் பள்ளிவாசல்களுடன் மத்ரசாக்களும் நூல் நிலையங்களும் இணைக்கப் பட்டிருந்தன. பள்ளிவாசல்களிலிருந்து இஸ்லாமியப் பிரசாரம் செய்யப்பட்டது. ஜிஹாத் செய்ய நேரிடுங்கால் பள்ளிவாசல்கள் கொத்தளமாகவும், ஆயுதசாலைகளாகவுமிருந்தன. குலாபாயே ராஷீதீன்கள் காலத்திலும் அப்படியே. பனு உமையாக்கள் காலத்தில் வெள்ளிக்கிழமைகளில் மஸ்ஜிதிலுள்ள பிரசங்கப் பீடத்தில் கலிபாவே குத்பா பிரசங்கத்தை நிகழ்த்தி வந்தார்.

அரபிய நாகரீகத்தைப் பற்றி ஜெர்மானியப் பேராசிரியர் ஜோஸேப் ஹெல் என்பவர் பின்வருமாறுஎழுதியுள்ளார்:—

"மஸ்ஜிதிலேயே (பள்ளிவாசல்) கல்வி அளிக்கும்படி செய்தது இஸ்லாம், 5வது நூற்றாண்டுவரை பள்ளிவாசல்களே பல்கலைக்கழகமாக விளங்கி வந்தன. குர்ஆன், ஹதீஸ் மார்க்கச் சட்டம், எலலாம் இங்கு போதிக்கப்பட்டன முஸ்லிம் கல்லூரிகளில் அதுகாலை ஆசிரியர்களுக்கு பரீக்ஷை எழுதத் தேவை இல்லை. பட்டமும் கிடையாது. திறமையும் தகுதியும் இருந்தால் போதும்"

இன்றைய நிலைமையில் பள்ளிவாசல்களில் பலவிளக்கு எரிக்கவும் பணம் இல்லாத நிலைமையில் இருக்கிறது. "வக்பு" செய்யப்

(11-ம் பக்கம் பார்க்க)

ஒளியிற் சிறந்தது
சூரிய பிரகாசம்
பீடியிற் சிறந்தது
கமலா பீடியே

★

கமலா, லீலா பீடிகளும் பீடிக்குத் தேவையான நாகப்பூர், சிங்கறணி இலைகளும், ஆக்கூழ் நிப்பாணிபுகையிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. அவசியம் கவனிக்கப்படும்.

கமலா ஸ்டோர்ஸ்

Proprietor: S. V. பொன்னம்பலம்
15, செட்டியார் தெரு கொழும்பு.
போன் 3597. தந்தி: தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

194ஏ, தட்டாதெரு போன்: 3411

1952 டிசம்பர் மீ 7உ

## ஜனக்குரல்

### "மாறு வாறு" உணர்வாரா?

சமூகத் தொண்டன் பத்திரிகையின் ஆசிரியருக்கு "மாறு வாறு" என்ற புனைப் பெயருடன் மரவரி முறைஒழிக்கப்படவேண்டுமென்ற கருத்தப்பட ஒருவர் கடிதமெழுதியிருந்தார். அக்கடிதத்தில் மர வரி முறை ஒழிக்கப்படக்கூடாதென்று கூறுபவர்களை அர்த்தமற்ற முறையில் கண்டிப்பதாக நினைத்துக் கத்தியிருந்தார்.

அதில் ஆண்டவன் வந்து இரவாது பிழைத்திருக்க எல்லோருக்கும் வரந் தருகிறேன் என்றால் ஐயா! பிரேதப் பெட்டி செய்டவர்கள் எப்படிப்பிழைப்பதுஎன்று கேட்டவனைப்போல இருக்கிறது மரவரிமுறை ஒழிக்கப்பட்டால் மரச்சீவுவோர் என்ன செய்வது என்று கேட்பது என்கிறார் தோழர் "மாறு வாறு".

'மாறு வாறு'விற்கு நான் கூறுகிறேன் ஆண்டவன் பிரேதப் பெட்டி செய்வோர் உட்பட எல்லோருக்கும் பிழைக்க வரந்தரும்போது பிரேதப் பெட்டி செய்பவர் எப்படிப்பிழைப்பது என யாரும் கேட்க மாட்டார்கள் ஆனால் மர வரி முறை எடுக்கப்பட்டால் ஏர்கனவே இரண்டு லட்சம்பேர் வேலையில்லாது இருக்கும்போது இன்னும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிக் கொலைகளவு முதலியன அதிகரிக்கும்.

மேலும் திருவள்ளுவர் கூறியதைச் சிந்தித்தீரே தவிர திருக்குறளில் மேற்கோள் காட்டுவோரும் காந்தியம் பேசுவோரும் மது விஷயத்தில் மாத்திரம் காந்தியாரையும் திருவள்ளுவரையும் சந்திக்க இழுக்கின்றனரே தவிர தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் பிரச்சாரம் செய்து காந்தியாரும் வள்ளுவரும் கூறிய நல்ல வழியை நிலைநாட்ட முன் வராததேன் எனச் சிந்தித்தீரா?

மது வெறியிலும் பார்க்க மத வெறியும் சாதி வெறியும்தான் மிகவும் பொல்லாத வெறி என்பதை உணர்ந்தீரா?

இனிமேலாவது திருவாளர் 'மாறு வாறு' மது ஒழிப்புப் பிரச்சாரகர்கள் தொழிலாளி நல்ல நிலைமைக்கு வருவதைக் கண்டு பொறுமையினால்தான் இப்படி ஓலமிடுகின்றனர் என்றும் பொதுநலம் விரும்பிகளாகளாயிருடயின் மிகக் கொடுமையான சாதிவெறியை முதன்முதல் பிரச்சாரம் செய்து தீர்க்க முயன்றிருப்பர் என்பதை உணரட்டும்.

இப்படிக்கு,
"சேறு வாறு"
சட்டநாதர் கோவிலடி

# சூறுவளியின் சூறையாட்டம்

வங்காளக் கடலில் உருவான ஒரு பயங்கரமான சூறுவளி யாழ்ப்பாணப் பகுதியைச் சூறையாடிச் சென்றுவிட்டது. 24 மணி நேரமாகதொடர்ந்தடித்த சுழல் காற்றினால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் சேதம் சொல்லத்தரமன்று. புயலும் மழையும் சேர்ந்து வட இலங்கையில்வாழும் ஏழை மக்களைப் பெண்களுடனும் குழந்தைகளுடனும் இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி தெருவிலே அநாதரவாகத் தவிக்கும்படி செய்துவிட்டன. பெரும்பாலும் சாதாரண ஏழை மக்களே இந்தப் பரிதாபகரமான நிலைமைக்கு உள்ளாகியிருக்கின்றனர்

ஏழைக் கமக்காரர்கள் சாகுபடி செய்த பயிர்களெல்லாம் சர்வநாசமாகிவிட்டன. கடலேரி பெருக்கெடுத்து வயல்களில் உப்பு நீர் பாய்ந்து நெற்பயிர்களை அழித்துவிட்டதால், அதனை நம்பி வாழ்ந்த விவசாயிகள் வேறு வழியின்றி கையைப் பிசைகின்றனர். ஏறத்தாழ வாழைத் தோட்டங்கள் எல்லாவற்றையும் பயற்கார்று நாசமாக்கிவிட்டதால், அவற்றை ஜீவனோபாயமாகக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான ஏழைகள் வாழ்வதற்கு வேறு வழி பிறக்காதா என்று ஏங்கித் தவிக்கின்றனர். தங்களின் ஏக சொத்தான படகுகளையும் வலைகளையும் இழந்த மீன்பிடித் தொழிலாளர்கள் தங்கள் வயிற்றிலடித்த புயலின் கொடுமைகளை வாய்விட்டுச் சொல்லிக் கண்ணீர் வடிக்கின்றனர் அவர்களின் குடிசைகள் எல்லாம் ஆடிக்காற்றில் இலவம் பஞ்சைப்போல இச்சூறுவளியில் சிக்கிப் பறந்துபோய்விட்டமையால், அவர்கள் குழந்தைகுட்டிகளுடன் கடலோரத்தில் நின்று அங்கலாய்க்கும் பரிதாபக்காட்சி கல்நெஞ்சினரையும் கலங்க வைத்துவிடுகின்றதாம்.

புயலுக்கு இலக்காகியும், மரங்கள் விழுந்தும், எத்தனையோ குடிசைகளும், வீடுகளும் பாடசாலைகளும் தரைமட்டமாகிவிட்டன. இதனால் 23 பேர் கொல்லப்பட்டதாக ஒரு செய்தி கூறுகிறது ஆனால் கொல்லப்பட்ட ஆடுமாடுகளுக்கும் கோழி, வாத்து முதலிய ஜீவன்களுக்கும் விவரம் தெரியவில்லை

சூறுவளியினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உடனடியாக கஷ்ட நிவாரணம் அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் அவசரக் கடமையாகும். மந்திரிகளும் அதிகாரிகளும் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் ஓடுவதைப் பார்த்தால் அரசாங்கம் அனாதைகளுக்கு உதவி அளிக்க முன்வந்துவிட்டது என்றுதான் தெரிகிறது. அரசாங்கம் அதற்காக ஒரு சிறிய தொகையையும் ஒதுக்கியிருக்கிறது. ஆனால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அனைவரும் தமிழ் மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்குச் சிங்கள தர்பார் தீவிர சிரத்தையோடு சகல உதவிகளையும் செய்ய முன்வருமா, அல்லது அபவாதத்திற்கு ஆளாகிவிடக் கூடாதென்பதற்காக "நிவாரணம்" என்ற பெயரால் கண்துடைப்பு வித்தை காட்டுமா என்பதுதான் கேள்வி. அனாதரவாக நின்று தவிக்கும் அபலைகளுக்கு எல்லாவித உதவிகளையும் செய்யுமாறு ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்க வேண்டியது வட இலங்கையைச் சேர்ந்த பார்ராளுமன்றப் பிரதிநிதிகளின் தவிர்க்க முடியாத கடமையாகுமென்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம் சேதவிபரங்களையும், யார்யாருக்கு எந்தெந்த விதமான உதவிகள் அளிக்கப்படவேண்டுமென்ற விபரங்களையும் சேகரித்து, பொருள் நஷ்ட புள்ளிவிபரங்களையும் தயார் செய்து அரசாங்கத்திற்கு சமர்ப்பித்து நிவாரணமளிக்குமாறு வற்புறுத்த வேண்டியது அவர்கள் உடனடியாகச் செய்ய வேண்டிய வேலையாகும்.

நிவாரணம் என்று இரண்டுவார ரேஷன் அரிசியை இனமாகக் கொடுத்துவிட்டால் போதாது. அப்படிப்பட்ட நிவாரணம் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்னை முழுவதையும் தீர்த்து விடாது. அவர்களுக்கு நீண்டகால நிவாரணமும் அளிக்கப்படவேண்டும். பாழாய்ப்போன நிலங்களைச் சீர்படுத்தி மீண்டும் சாகுபடி செய்வதற்கு ஏழை கமக்காரர்களுக்கு பண உதவியும் கடன் உதவியும் அளித்தல் வேண்டும். மீன்பிடித் தொழிலாளர்களுக்கு அவர்களின் தொழிலுக்கு அவசியமான வலை, படகு முதலிய தளவாடச் சாமான்களை வாங்குவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் வேண்டும். வீடிழந்தவர்களுக்கு மீண்டும் வீடுகளைக் கட்

டுத்துதவ வேண்டும். தங்களைப் போசிப்பவர்களை இழந்து அனாதைகளாகிவிட்ட பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நிரந்தரமான கஷ்ட நிவாரணமளிக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

அளிக்கப்படும் உதவிகள் அனைத்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போய்ச் சேர்கின்றனவா என்பதை கவனிக்க வேண்டியதும் மிகமிக அவசியமாகும். ஏனெனில், களனி நதிப் பள்ளத்தாக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரணத்தின் ஒரு பகுதியை இடைத்தட்டுப் பெருச்சாளிகள் ஜீரணம் செய்துவிட்டதாக முன்பு ஒருமுறை புகார் செய்யப்பட்டது அம்மாதிரி சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருக்கும் பொருட்டு பிரதேசவாரியாக மக்களின் நம்பிக்கையைப்பெற்ற "நிவாரண சபைகளை" நிறுவி, அவற்றின் மூலம் பணத்தையும் பொருளையும் விநியோ

# அரசாங்க இலாகாக்களில் சிக்கனம்

—o—

## விசேஷ அதிகாரிகளை நியமனம் செய்ய முடிவு

அமெரிக்க ரயில் வண்டிகளில் இலங்கையில் இருப்பதுபோல வகுப்புக்கள் உள்ளனவா

விடை:– அமெரிக்காவில் ரயில் வண்டிகளில் இங்கிருப்பதுபோல, முதல், இரண்டாம், மூன்றும்வகுப்புகள் இல்லை.

சிறிது தூரம் போகும் வண்டிகள் பகல் வண்டிகள் எனப்படும். நெடுந்தொலை போவனவற்றில் தூங்குவதற்கு வசதியான பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும். இரவில் நெடுந்தூரம் பிரயாணம் செய்வோருக்கு இரண்டு விதமான வசதிகள் உள குறைந்த செலவில் சாய்ந்த இருக்கைகளில் அமர்ந்து பிரயாணம் செய்யலாம் இன்னும் கொஞ்ச அதிக கட்டணம் கொடுத்தால், இரவில் படுக்கைகளாக மாற்றிக்கொள்ளக் கூடிய சாய்வு ஆசனங்கள் கொண்ட பெட்டிகளில் ("புல்மன்கார்") பிரயாணம் செய்யலாம். மறைவுத் திரைகள் உண்டு ஒவ்வொரு படுக்கைக்கும் மெத்தையும் போர்வையும் உண்டு.

தனிமையாக பிரயாணம் செய்ய விரும்புவோர் தனி அறைகள் தேடிக்கொள்ளலாம். இதற்கு "ரூமெட்" என்று பெயர். இதனை நாடுவோர் வெகு சிலரே. ஏனைனில் சாதாரணமாக எல்லா பெட்டிகளிலும் போதிய வசதிகள் இருக்கின்றன. எல்லா வண்டிகளிலும் சாப்பாட்டுப் பெட்டிகள் உண்டு

அவசியமான செலவுகளை ஆராய்ந்து முடிவு செய்வதற்காகவும், கடுமையான சிக்கன முறையைத் தீவிரமாக அமுல் நடத்துவதற்காகவும் அரசாங்க இலாகாகள் அனைத்திற்கும் சிக்கன அதிகாரிகளை நியமனம் செய்ய அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது

பொக்கிஷ இலாகா இந்த முடிவை ஒரு அந்தரங்க சுற்றறிக்கையின்மூலம் நிரந்தரக காரியதரிசிகள் அனைவருக்கும் இவ்வாரம் தெரிவித்திருக்கிறது.

பிரஸ்தாப சிக்கன அதிகாரிகளின் அலுவல்களை செய்வதற்காக நம்பிக்கைக்குப் பாத்திரமான சிரேஷ்ட அதிகாரிகளை நியமனம் செய்யும்படி பிரதான கணக்கு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

சாத்தியமான அளவு செலவுகளைக் குறைக்குமாறு நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் இலாகா தலைவர்களுக்கும் அதன்மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

# "காதலும் காமமும்"

(வராலு)

காதலாயதும் காமவேட்கையும்
பூதலத்திரு தன்மை—இதை
பொருந்த சொல்லுதல் புன்மை.

காமமாமதி காதலோ ரவி
ஆமறிந்துளங் காணே—சும்மா
அலட்டிக் கொள்ளுதல் வீணே

உடலு முயிருமே ஒன்றுமாம் வெறும்
சடல மழிதலோ உண்மை—உயிர்
சாதலில்லை யித்தன்மை

புறமும் உள்ளினு முணருந் தன்மையை
துறவி அறிதலைப் போன்று—மனம்
அறிவ தழிதலே சான்று.

கனிந்த அன்பையே காதலென்பது
தணிந்த பின்னெது காமம்?—இத்தால்
சகல சீவற்கும் சேமம்

காம சித்தமா கவியும் பித்தர்கள்
தா முரைக்கலாங் காதல்—அறியார்
காமம் காதலா யாதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் பேய்ச் சூறாவளி

## வயல்கள் வெள்ளக் காடாயின

## வாழைத் தோட்டங்கள் நாசமடைந்தன

## 23 பேர்களுக்கு உயிர்ச்சேதம்

## ரூ50லட்சத்திற்குமேல் பொருள் நஷ்டம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இரு தினங்களாக வீசிய பலத்த புயல் காற்றினால் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்கிறது. எரிகிற நெருப்பில் எண்ணெயைவிட்டதைப்போல புயலுடன் கனத்த மழையும் சேர்ந்து கொண்டது. இதனால் பல வீடுகள் நொறுங்கியதோடு, பயிர் பச்சைகளும் நாசமாகி உணவு உற்பத்தித் திட்டம் சீர்குலைந்துவிட்டது.

வீடின்றியும், உணவின்றியும் தவிக்கும் மக்களுக்கு நிவாரணமளிக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு ஆரம்பமான புயற்காற்று ஞாயிற்றுக்கிழமை காலையில் பெரும் சூறாவளியாக மாறி பெரும் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியுள்ளன. வீடுகளின்மீது மரங்கள் விழுந்ததால் 23 பேர் கொல்லப்பட்டதாக இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

வாழை உற்பத்திப் பிரதேசங்களான நீர்வேலி, சிலுப்பிட்டி, புத்தூர், உரும்பிராய் முதலிய இடங்களிலுள்ள வாழைத் தோட்டங்கள் அனைத்தும் சர்வநாசமாகிவிட்டன. மா, பலா, பனை, தென்னை, பாக்குமரங்கள் வேருடன் சாய்ந்துவிட்டன.

யாழ்ப்பாணக் கடலேரி பெருக்கெடுத்து வயல்களில் உப்பு நீர் பாய்ந்ததால் கன்று சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்பயிர்கள் நீரிலே மூழ்கி நாசமாகிவிட்டன.

### தொடர்பு துண்டிக்கப்பட்டது

யாழ்ப்பாணம் நகரம் நாட்டின் இதர பகுதிகளுடன் தொடர்பின்றி தனியாக்கப்பட்டுவிட்டது. தந்திக் கம்பங்கள் காற்றில் அகப்பட்டு சாய்ந்துவிட்டதாலும் ரஸ்தாக்கள் நீரில் மூழ்கிவிட்டதாலும், தபால் போக்குவரத்தும், வண்டிகள் போக்குவரத்தும் தடைபட்டன.

காங்கேசந்துறைப் பிராந்தியத்தில் சில பாடசாலைக் கட்டிடங்கள் தரைமட்டமாகிவிட்டன. விமானத் தளம் சேதமுற்றது.

புங்குடுதீவில் அரசினர் பாடசாலைக் கட்டிடமொன்று புயலுக்கு இலக்காகி தகர்ந்து விழுந்து நொறுங்கியது. மற்றொரு வித்தியாசாலையிலும் ஒரு பகுதிக் கட்டிடம் நொறுங்கி விழுந்தது. எத்தனையோ வீடுகளின் கூறைகள் காற்றில் பறந்தன.

### 50 லட்சம் நஷ்டம்?

மீன்பிடித் தொழிலாளர்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வள்ளங்கள் கவிழ்ந்துவிட்டன. அவர்களின் குடிசைகள் காற்றில் பறந்தன.

புயலினாலும் மழையினாலும் ஏற்பட்ட பொருள் நஷ்டம் 50 லட்சம் ரூபாய்களுக்கு மேலிருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1884க்கும் 1917கும் பிறகு இம்மாதிரியான சூராவளிக் காற்று வீசினது கிடையாதாம்.

சென்னை நகரில் நூற்றுக்கணக்கானவர்கள் வீடிழந்து தவிக்கின்றனர். அங்கு உயிர்ச் சேதமும் உண்டு. போக்குவரத்துகளெல்லாம் ஸ்தம்பித்துவிட்டன.

# ரஞ்சிதம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விம்மி விம்மி அழுதாள்.

மனோகரனும் ரஞ்சிதமும் அவளுக்கு ஆறுதல் மொழி கூறித் தேற்றினர். பிரேமாவதி, டக்ளஸ் துரைக்கு கொலைகாரப் பட்டம் சூட்டிவிட்டதால் இனிமேல் அவன் விஷயத்தில் பிரேமாவதி மிகுந்த ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று மனோகரன் கூறினான். தன்னை மனோகரன் இருக்குமிடத்தில் கொண்டுபோய் விடும்படி ரஞ்சிதம் மாறுவேடத்திலிருந்த மனோகரனையே வேண்டிக் கொண்டாள். அவனும் அதற்குச் சம்மதித்து பிரேமாவதியிடம் விடைபெற்று ரஞ்சிதத்தையும் அழைத்துக்கொண்டு கிளம்பினான்.

மனோகரன் ரஞ்சிதத்தை அழைத்துக்கொண்டு தனது ஜாகைக்குச் சென்று தலையில் கட்டியிருந்த துணியை அவிழ்த்ததும் ரஞ்சிதம் பிரமித்துப்போனாள். "ஆ! நீங்களா?" என்று கேட்டவண்ணம் அவனுடைய மார்பில் தலையைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். மனோகரன் பரிவுடன் அவளுடைய தலையைத் தடவியவண்ணம், "ரஞ்சி! நீ என்ன ஆண்பிள்ளையா? கண்டிக்கு வரவேண்டுமானால் எனக்கு அறிவித்தால் நான் வந்து அழைத்திருப்பேனே? நீ தன்னந்தனியாக பிரயாணம் செய்யத்துணியலாமா? அழகிகளுக்கு ஆபத்து கூடப்பிறந்ததல்லவா? தெய்வாதீனமாக நீ அவ்வளவோடு தப்பினாய்! அவன் உன்னைக் கசக்கி முகர்ந்து தூர வீசியிருந்தால் உன் கதியென்ன? இந்தமாதிரி அசட்டுத்தனமான காரியம் செய்யாதே" என்று கூறித் தேற்றினான்.

ரஞ்சிதமும் மனோகரனும் வெகு நேரம்வரை உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். நேரம் போனதே தெரியவில்லை. கோழி கூவிப் பொழுதும் புலர்ந்தது. மனோகரனும் ரஞ்சிதமும் இருந்து பேசிக்கொண்டிருந்த அறை ஜன்னலில் ஒரு நிழல் உருவம் தெரிந்தது. அதைக் கண்ட மனோகரன் காணாதவன்போல் பாசாங்கு செய்து "ரஞ்சி! இருந்துகொள் உனக்கு காப்பி கொண்டுவருகிறேன்" என்று கூறி அடுத்த அறைக்குள் சென்று அதன் கதவைத் திறந்து கொண்டு வெளியே பாய்ந்தான். ஜன்னலோடு ஒட்டி நின்று காதலரிருவரும் கதைத்ததனைத்தையும் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்த ஆசாமி ஓட்டம் பிடித்தான். மனோகரன் அவனைக் கொஞ்சத் தூரம் துரத்திச் சென்றும் அவனைப் பிடிக்கமுடியவில்லை. அந்த ஆசாமி டக்ளஸின் கையாளாக இருக்க வேண்டுமென்று மனோகரன் யூகித்தான்.


மனோகரனின் யூகம் சரியே. பிரேமாவதி வீட்டிலிருந்து வெளியேறிய டக்ளஸ் கண்டி நகரிலுள்ள பேர்போன காடையனான டிங்கிரி பண்டாவை சந்தித்து காசு கொடுத்து பிரேமாவதி வீட்டுக்குச் சென்று அங்கு நடப்பவற்றையும் பிரேமாவதியின் மாமா என்று கூறிக்கொண்டு அங்குவந்த தாடிவாலா யாரென்பதையும் அறிந்துவரும்படி அனுப்பியிருந்தான். அவன் பிரேமாவதி வீட்டுக்குச் சென்று அங்கு ரஞ்சிதம் சொன்ன கதை பூராவையும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு மனோகரனையும் ரஞ்சிதத்தையும் தொடர்ந்து சென்று மனோகரனின் ஜாகையில் நிகழ்ந்தவற்றையும் கவனித்துக்கொண்டிருந்துவிட்டு மறுநாள் விடிவதற்குள் மல்லிகைத் தோட்டத்துக்குச் சென்று எல்லா விபரங்களையும் அதியோடந்தமாக டக்ளஸிடம் கூறிவிட்டான். பிரேமாவதியின் மாமா என்று கூறிக்கொண்டுவந்த தாடிவாலா மனோகரன் தான் என்பதை அறிந்ததும் டக்ளஸ் துள்ளிக் குதித்தான்.

அன்று மாலை மல்லிகைத் தோட்டத்தில் தொழிலாளிகளின் மாபெரும் கூட்டமொன்று நடைபெறவிருந்தது. அக்கூட்டத்தில் மனோகரன் சொற்பொழிவாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டக்ளஸ் பத்து சிங்களவர்களைப் பிடித்து இந்தியாக்காரன்களால்தான் சிங்களவரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகியிருக்கின்றதென்றும் சோற்றுக்கு வழியில்லாமல் பிழைக்கவந்த இந்தியர்களை இலங்கைத் தோட்டங்களில் கொட்டமடிக்க விடலாகாதென்றும் கூறி மாலையில் நடைபெறும் கூட்டத்தில் கலகமுண்டுபண்ணி மனோகரனை அடித்து நொறுக்கி விடும்படி யோசனை கூறினான். இதனைச் சாதிப்பதற்காக அவர்களுக்கு பணமும் சாராயப் போத்தல்களும் வழங்கினான். அவர்களும் கூட்டத்தைக் குழப்பி மனோகரனை அடித்து நொறுக்குவதாக ஒப்புக்கொண்டனர்.


## கிறிஸ்மஸ் நெருங்குகிறது

உங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஏற்ற பரிசு என்ன அளிக்கலாம் என்று கவலைப்படுகிறீர்களா?

### அக்கவலை உங்களுக்குவேண்டாம்




ஏராளமான சுவிஸ் கைக் கடிகாரங்கள் கண்ணைக் கவரும் கவர்ச்சிகரமான எண்ணற்ற ரகங்கள்

அழகான மேஜை மணிக்கூடுகள், சுவர்க் கடிகாரங்கள், பவுண்டன் பேனாக்கள், அலங்கார ஆபரணங்கள்

கண்ணைக் கவரும் டிசைன்களில் எங்களிடமுண்டு.

இன்றே விஜயம் செய்யுங்கள்

## கே. எம் மீருசாகிபு


86, மெயின்ஸட்ரீட், கொழும்பு-11

போன்: 5988. ஸ்தாபிதம்: 1905. தந்தி: "Kayems"

## தானே இயங்கும் கைத்துப்பாக்கிகள்

### லைசன்ஸ் கிடையாது

முதலில் பாதுகாப்பு




6 வெடி கைத் துப்பாக்கி

நாடகத்திற்கும், சினிமாவிற்கும், அபாய காலத்தில் திருடர் பயத்திற்கும் மிக உபயோகமானது. வெடி தீர்க்கும்போது புகையையும், நெருப்பையும் கக்குகிறது.

உண்மை கைத் துப்பாக்கியைப் போல் தோற்றமளிப்பது.

ஒரு டஜன் இனாம் தோட்டாக்களுடன் விலை ரூபா 8-00. விசேஷ செம்பினாலான ஒகஸிடைஸ்ட் 666ம் நம்பர் விலை ரூபா 10-00. பார்சல் தபாற் செலவு ரூபா 1-2-0.

வேறு: ஒவ்வொரு ஆர்டருக்கும் ஒரு புட்டி ரிவால்வர் எண்ணெய் இனாம்.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ்.

கிடைக்குமிடம்:

MESSERS AMERICAN TRADING COMPANY,

(A. T. C.) Jullundur City (INDIA,


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ★ தியாகி ரகு

-"கூத்தன்"-

'ரகு............'

'ம்......ம்......ம்......ம்'

"என்ன? எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த யோசனை?'

"நான் படுகிற பாட்டில் கோட்டையாவது கொத்தளமாவது'

"என்னப்பா அப்படிப் பிரமாதமான கஷ்டம்?... ஓ! வயது அப்படியான வயதுதானே!! என்றாலும் நீ தேசத் தொண்டனாயிற்றே; உனக்கு அப்படியான எண்ணங்களே ஏற்படச் சந்தர்ப்பமில்லையே?" என்று கேட்டுவிட்டுக் கண்ணைச் சிமிட்டினான் அவன் நண்பன் கனகசபை.

"கனகு! என்ன தான் தேசத் தொண்டனானாலும் நானும் ஒரு இளம் வாலிபன்தானே?'

"ஓகோ! அப்படியென்றால் நீயும் காதலில் கட்டுண்டு கலங்குகிறாயாக்கும்"

"..................."

'என்ன வாய் அடைத்து விட்டதா? இதைப்பற்றி இவ்வளவு நாளும் எனக்குச் சொல்லவில்லையே'

"நான் சொல்லவில்லை தான் கனகு. அருமை நண்பன் கனகுவிடம் சொல்லியிருந்தால் ஆலோசனையாவது கேட்டிருக்கலாம். கருமம் முற்றிய பின் சொல்வதனால்........."

"பயனில்லை என்றுதானே எண்ணுகிறாய். என்னாலானதை உனக்காக நான் செய்வேன்; சொல்"

"உனக்குச் சொல்லாமல் மறைத்தது ஒன்றும் கிடையாது இதையும் சொல்கிறேன்" என்று அந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தான் ரகுநாதன்.

ஃ

அன்று ஞாயிற்றுக் கிழமை பாடுபட்டுழைக்கும் பாட்டாளிகளின் கூட்டம் ஒன்று நடக்க இருந்தது. என்னையும் பேசும்படி கேட்டிருந்தார்கள். எனது சைக்கிளில் கூட்டத்துக்குச் சென்று கொண்டிருந்தேன். தெரு வழியே போகும் பொழுது 'ஐயோ, ஐயோ' என்று பல குரல்கள் கேட்டன. சிலர் ஒரு வீட்டை நோக்கி ஓடினார்கள். நானும் எனது சைக்கிளை அவ்விடத்துக்குச் செல்லும் பாதையில் திருப்பிக் கொண்டு சென்றேன். சப்தம் வந்த வீட்டிலிருந்து திரும்பிவந்த ஒருவரிடமிருந்து யாரோ கிணற்றுள் விழுந்துவிட்டார்கள் என்று நான் அறிந்து கொண்டேன்.

சைக்கிளை வேலியில் சார்த்திவிட்டு அவ்விடத்துக்குச் சென்றேன். கிணற்றுள் பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை. தண்ணீர் அரைக்கிணறு வரையில் நின்றது. சிலர் தலையிற் கையை அடித்தபடியும், சிலர் அழுதுகொண்டும், சிலர் பதைபதைத்துக் கொண்டும் நின்றார்கள். ஆனால் எல்லோருடைய கவனமும் கிணற்றினுள்தான் இருந்தது. ஒருவரை அணுகி "ஆளைத் தூக்கியாச்சா" என்று கேட்டான். அவர் பதைபதைப்புடன் "இல்லை மோனை. தாண்டுபோச்சு. தூக்க ஒருவருமில்லை" என்று கூறினார்.

"நான் இறங்கிப் பார்க்கட்டுமா?" என்று கேட்டேன்.

"ஓம் தம்பி இறங்கு" என்று சடுதியாக பல குரல்கள் ஒலித்தன.

உடனே சேட்டைக் கழற்றி பக்கத்தில் போட்டுவிட்டு வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு கிணற்றுள் குதித்தேன். நான் ஏதாவது கயிற்றைத் தானும் பிடித்துக் கொள்ள வேண்டுமே என்றுகூட எண்ணவில்லை.

தண்ணீரினுள் மூழ்கினேன். ஆளைக் காணவில்லை. மிதந்து மூச்சுவிட்டுக் கொண்டு மறுமுறையும் தேடினேன். இம்முறை ஆளுடன்தான் மிதப்பது என்ற முறட்டுப் பிடிவாதத்துடன். ஆளைக் கண்டேன். ஒரு கையால் ஆளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு மற்றக் கையால் நீரை அடித்து மிதக்க எத்தனித்தேன். முடியவில்லை பாசி அல்லது கொடி ஆளில் சுற்றியிருந்ததோ என்னமோ தெரியவில்லை. பல தடவை முயன்று தான் கடைசியாக மிதக்கக் கூடியதாயிருந்தது மிதந்தேன். பிடிப்பதற்கு ஒன்றும் இல்லை நல்லகாலமாக எனது கண்ணில் கிணற்றுப் படிக்குப் போட்டிருந்த கம்பி தட்டுப்பட்டது. தண்ணீரை அடித்துக் கிட்டச் சென்று பிடித்துக் கொண்டேன். இவையெல்லாம் ஒரு வினாடியில் நடந்த விஷயம்

நீரில் விழுந்தவர்கள் எவரும் சிறு சுள்ளி சந்தித்தாலும் பிடிக்க எத்தனிப்பது சகஜம். ஆனால் என்னை அந்த ஆள் ஒன்றும் செய்யவில்லை. அறிவிருந்தாலல்லவோ என்னைக் கட்டிப் பிடிக்க. தலை எனது தோளின்மேல் சாய்ந்திருந்தது. ஆளின் தலைமயிர் முகத்தை மறைத்திருந்தது. அப்பொழுதுதான் உடுப்பிலிருந்தும் நீண்ட மயிரிலிருந்தும் அது ஒரு பெண் என அறிந்தேன்

வெளியில் நின்றவர்களிடம் கதிரை கட்டி இறக்கச் செய்து அதில் அப் பெண்ணை இருத்தி வெளியே தூக்கச் செய்தேன் நானும் கம்பிவழியே ஏறி மேலே வந்தேன்.

அப்பெண்ணுக்கு அறிவில்லை; மூச்சும் இல்லை. இவ்வளவு பாடுபட்டும் ஆள் தப்பாமல் போய்விடுமோ என்ற பயம். அவளுக்கு முதலுதவி செய்ய எண்ணினேன் ஆனால் பெண்ணாயிற்றே. அதுவும் தாய் தந்தையர் சம்மதிப்பார்களா? அதைத் தகப்பனிடமே கேட்டுவிட்டேன். அவரும் சம்மதித்தார். அவரே பெண்ணின் ஈர உடைகளை மாற்றிவிட்டார் சுவாசத்துக்கு முதலுதவி செய்தேன் சுவாசம் வந்தது அத்துடன் அறிவும் வந்து கண்ணும் விழித்தாள்.

என்னைக் கண்டாள். தனது நிலையையும் பார்த்தாள் அவளுக்கு வெட்கம் வந்துவிட்டது. உடனே நான் அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டேன்.

கனகு! அவள் முகம்!...... ......முகமா? பார்த்த கண்களை தன்னிடத்தே பதிய வைக்கும் பைஞ்சோலை அல்லவா அது! கண்களோ கரு வண்டுகள் கருத்தைக் கவர்ந்திழுக்கும் கனிவாய்! கண்ணாடிக் கன்னங்கள் கம்பனாலும் வர்ணிக்க முடியாதப்பா அவள் அழகை என்றால் என்னால் எப்படி வர்ணிக்க முடியும். அவ்வழகில் எற்றுண்டு எழுந்த மனக் கிளர்ச்சிகளை எனது மன வலியால் மாற்றிக் கொண்டேன்

கிணற்றில் குதித்ததால் வேட்டி நனைந்துவிட்டது. ஈர வேட்டியுடன் எப்படி வெளியே போவது? அப்பொழுது ஒருவர் வேட்டி தந்து ஈர வேட்டியை மாற்றும்படி வேண்டினார். நானும் இசைந்து ஈர வேட்டியைக் காயப் போட்டேன். அப்பெண்ணை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக என்னை அழைத்தனர். நான் கூட்டத்துக்குப்போக வேண்டுமெனக் கூறி நின்றுவிட்டேன். என்னுடன் அவ்வீட்டில் ஒரு முதியவர் மாத்திரம் நின்றார். அவர் அப் பெண்ணின் பெரிய தகப்பனார் என அறிந்தேன். அவரே எனக்கு வேட்டியும் தந்தவர். அவர் என்னைப்பற்றி விசாரித்தார். அவரிடமிருந்துபெண்ணின் பெயர் மனோகரி என்றும் எஸ். எஸ். ஸி. வரை படித்துள்ளதாகவும் அவளது தகப்பன் சீதாராமன் பெரிய உத்தியோகத்திலிருப்பதாகவும் அறிந்து கொண்டேன்.

வேட்டி கெதியில் காய்வதாயில்லை. ஈர வேட்டியுடன் போகலாமென்றாலோ அப் பெரியவரின் அன்புக் கட்டளை குறுக்கிட்டது. ஆஸ்பத்திரிக்குச் சென்றவர்கள் திரும்பி வந்தார்கள். சீதாராமன் ஓடோடியும் வந்து என்னைக் கட்டித் தழுவினார் அவருடன் வந்த மனோகரி "இவரோ தூக்கியவர்" என்று கேட்டுவிட்டு என்னையே உற்றுப் பார்த்தாள். இருவர் கண்களும் சந்தித்தன

"தம்பி உம்மை நாம் என்றும் மறக்க முடியாது நீர் கிணற்றுள் விழுந்தவளைத் தூக்கியது மட்டுமல்ல; முதலுதவி செய்து உயிரையும் தப்புவித்தீர். நீர் முதலுதவி செய்யாதிருந்தால் மனோகரி தப்பியிருக்க முடியாது என டாக்டர் சொன்னார்" என்று அன்புடனும் ஆனந்தத்துடனும் சீதாராமன் கூறினார்.

"அடிக்கடி எமது வீட்டுக்கு வந்துபோக வேண்டும் தம்பி" என மனோகரியின் தாயும் கூறினாள். மனோகரி "இன்று அவர் இங்கு தங்கினாலே போகட்டுமே" என்று கூறினாள்.

'அவர் இங்கு இருந்துவிட்டால் காப்பாற்றுவார் என நினைத்து அடிக்கடி கிணற்றுக்குள் விழுந்து பார்க்கவோ?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தார் சீதாராமன். நாம் எல்லோரும் அவர் சிரிப்பில் கலந்து கொண்டோம்.

நன்றாக இருட்டிவிட்டது. வேட்டியும் ஓரளவு உலர்ந்திருந்தது. அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கூட்டத்துக்குச் சென்றேன். கூட்டம் முடிந்துவிட்டது கூட்டம் ஒழுங்கு செய்தவர்களிடம் நடந்ததைக் கூறி மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன்.

நான் பல நாட்கள் அப்பாதையால் சென்றுள்ளேன். சில நாட்கள் சீதாராமனின் வற்புறுத்தலால் அவர் வீட்டுக்குச் சென்றிருக்கிறேன். வீட்டுக்குச் சென்றால் ஏதாவது உயர்ந்த உணவு தயாரித்து எனக்கு மனோகரி தருவாள். சாப்பிட மறுத்தால் அவளது முகம் வாடிவிடும். நான் போகாத நாட்களில் கடிதங்கள் எழுதுவாள். முன் சில கடிதங்கள் சகோதரன் என்று மகுடமிட்டு பின் சிநேகிதனாக மாறி கடைசியில் காதலனென்று நிலைத்துவிட்டது இப்பொழுதும் அப்படியே எழுதுகின்றாள்.

நான் அவளைக் கண்டவுடன் ஏற்பட்ட எண்ணங்களை மாற்றி சகோதரிஸ்தானத்தைக் கொடுத்துவிட்டேன்

மனோகரி தனது எண்ணத்தை சீதாராமனிடம் கூறியிருக்க வேண்டும். அவளது இன்பத்தையே தனது இன்பமாகக் கருதும் அவரும் எனது விருப்பத்தைக் கடிதமூலம் வினவினார். மனோகரியை எனது சகோதரியாகக் கருதுகிறேன் என்பதுடன் எனது வறுமை வாழ்வையும் அவருக்கு கடிதமூலம் எழுதினேன். அன்றே மனோகரிக்கும் வறுமையில் பிறந்து வறுமையில் வளர்ந்து வறுமையில் வாடும் சீவியத்தையும் துன்பமும் பொறுப்பும் நிறைந்த தேசத் தொண்டே எனது வாழ்க்கையின் இலட்சியம் என்றும் தெளிவாக எழுதினேன்.

இன்று சீதாராமனைச் சந்தித்தேன். மனோகரி வரவர மெலிந்துபோவதாகக் கூறி அவளுக்குப் புத்தி கூறும்படி வேண்டினார். நான் அவருடன் சென்றேன். அவள் உருத் தெரியாது மாறியிருந்தாள். அன்று நான் கண்ட அழகுத் தெய்வமெங்கே இன்று நான் காணும் எலும்புக் கூடெங்கே. அவ்வளவு கண்ணீரும் எங்கிருந்துதான் வந்ததோ தெரியாது. எனக்கும் கண்ணீர் மணிமணியாக உருளத் தொடங்கியது.

"என்னை நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அன்று எங்கிருந்து காப்பாற்றினீர்களோ அவ்விடத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடுவேன்" என்று விம்மலிடையே கூறினாள்.

"என்ன மனோகரி" என்று என்னை அறியாது பதைபதைப்புடன் கத்திவிட்டேன். அவள் மறுமொழி சொல்லவில்லை கண்தான் நீர்வீழ்ச்சிபோல் நீரைச் சொரிந்தது அதற்குள் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்கவே அவள் ஒரு அறையுள் நுழைந்துவிட்டாள் தனது விம்மலை மறைப்பதற்காக.

சீதாராமன் வந்தார் "எங்கே மனோகரி" என்றார். "உள்ளே போயிருக்கிறாள்" என்றேன்.

"அவளுக்குப் புத்தி கூறினீரே" என்றார் அவர்.

(15-ம் பக்கம் பார்க்க)


மூல வியாதிக்கு

ரிஷி லேகியம்

(ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்)



மூலம், இரத்த மூலம், சீழ் மூலம், பௌத்திரம் கடுப்பு, கிருமி பூச்சி, உள்மூலம், கைகால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளிப்பேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்புவலி, நெஞ்சுவலி, பிடிப்புகள், சொறி, சிரங்கு, பற்றுகள், கண், கை, கால், திரேகஎரிச்சல் கண்கூட்டினால் தேகமெலிவு, வாத கடுப்புகள், தீராத மலச்சிகல், மற்றும் மூலசூட்டினால் ஏற்படும் வியாதிகள் யாவும் தீரும்.

ரிஷி மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.
போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்.

15நாள் மருந்து டின் ரூ. 3-00
30நாள் மருந்து டின் 1க்கு ரூ. 5-00
தபால் செலவு சதம் 85.

தீராதவியாதிகளுக்கு எங்களைகலந்து ஆலோசியுங்கள்
டாக்டர் T. H. மதுராநாயகம் வைத்தியராஜ்
M. D. M. S. (H) (கல்கத்தா)

ஞானசுந்தர வைத்தியசாலை
87, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவாவில் நடைபெறும் திவ்ய தரிசனம்

# தர்மதூதர் அர்ச். சவேரியாரின் திருச்சடலம்

## 400 ஆண்டுகளாக அழியாதிருக்கும் அதிசயம்

## லட்சக்கணக்கான யாத்திரீகர்கள் புனிதசடலத்தைத் தரிசிக்கின்றனர்

அர்ச். பிரான்ஸிஸ் சவேரியாரின் புனித சடலம் இந்தியாவில் கோவாவிலுள்ள 'பொவ்ஜீஸஸ்' என்ற தேவாலயத்தில் திங்கட்கிழமை தொடக்கம் ஒரு மாத காலத்திற்கு யாத்திரீகர்களின் தரிசனத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த திவ்ய தரிசனத்திற்காக உலகில் 60 நாடுகளிலிருந்து லட்சக்கணக்கான கத்தோலிக்க மதத்தினரும், கத்தோலிக்கர் அல்லாதவர்களும் கோவாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து அதிமேற்றிராணியார் அவர்களின் தலைமையின் கீழ் 1200 யாத்திரீகள் அர்ச். சவேரியாரின் புனித சடலத்தைத் தரிசிப்பதற்காகவும், அவர்காலமாகி 400 ஆண்டுகள் பூர்த்தியாவதையொட்டி நடைபெறும் 4வது நூற்றாண்டு வைபவத்தில் கலந்து கொள்வதற்காகவும் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7 30 மணிக்கு கோவாவுக்கு கப்பலில் புறப்பட்டுச் சென்றார்கள் இது இந்நாட்டினது தேசிய யாத்திரை என்றே கூறவேண்டும் இலங்கை யாத்திரீகர்கள் சனிக்கிழமை திவ்ய சடலத்தைத் தரிசிக்கிறார்கள்.

அழிந்து போகாது பாதுகாப்பதற்கான யாதொரு விதமான முறைகளும் அனுஷ்டிக்கப்படாமல் சடலமொன்று நான்கு நூற்றாண்டுகளாசா அழியாது நீடித்திருக்கிறதென்றால அது இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதம் என்பதில் ஐயமில்லை சில வருடங்களுக்கு முன்பு திருச்சடலத்தின் வலது கரம் தனியாக எடுக்கப்பட்டுரோம் நகரத்திலிருக்கும் பரிசுத்த பொருட்களின் பாதுகாப்புச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது இந்த பரிசுத்தகரம் தரிசனத்திற்காக இப்பொழுது ரோமிலிருந்து கோவாவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்த பரிசுத்த திவ்ய சடலத்தைத். தரிசனத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் பொவ்ஜீஸஸ் தேவாலயம் டங்ஹனியின் சோமகலை அர்ச். சவேரியாரின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாகும் இதில் ?00 ராத்தல் எடையுள்ள ஸ்வர்ணமயமான ஒரு பேழையில் இத்திருச் சடலம் வைக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதம் 3ந் தேதி திங்கட்கிழமை தொடக்கம் யாத்திரீகர்களின் தரிசனத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் இத்திவ்ய சடலத்தின் பாதங்களைத் தரிசிப்பதுடன், அதனைத் தொட்டு முத்தமிடும் பாக்கியமும் பக்தர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

### இலங்கை விஜயம்

அர்ச். சவேரியார் 1506ம் ஆண்டு ஏப்ரல் 7ந் தேதி ஸ்பெயின் தேசத்தில் ஒரு பிரபுக்கள் குடும்பத்தில் திரு அவதாரம் புரிந்தார்கள். உயர்தர கல்வி கற்பதற்காக 1525ல் அவர்கள் பாரிஸ் சர்வகலாசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கே எம். ஏ பட்டம்பெற்றார்கள். பின்னர் அவர்கள் அர்ச் இக்னேஷியஸ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபையில் சேர்ந்து தேவதர்மத்தைக் கற்றுணர்ந்து, பூஜ்யராகி மதப் பிரசாரத்திற்காக கோவாவுக்கு வந்து சேர்ந்தார்கள். திருவாங்கூர், கொச்சி ஆகிய இந்தியப் பிரதேசங்களுக்கும் கன்னியாகுமரி, மணப்பாடு. தூத்துக்குடி, நாகப்பட்டணம், சென்னை முதலிய இடங்களுக்கும் விஜயம் செய்து ஓய்வு ஒளிச்சலின்றி கிறிஸ்து தர்மத்தைப் பிரசாரம் செய்து வந்தார்கள்

1545ல் அர்ச் சவேரியார் இலங்கைக்கும் விஜயம் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது பின்னர் மலேயாவுக்கும், ஜப்பானுக்கும் சென்று சேவைபுரிந்தார்கள் மீண்டும் இலங்கைக்கு வந்து 1551ம் ஆண்டில் கோவாவுக்குத் திரும்பினார்கள்.

### நறுமணம் வீசும் திருச்சடலம்

1552 ஏப்ரல் 17ந் தேதி அங்கிருந்து சீனாவுக்குப் புறப்பட்டு சீனாவின் காண்டன் நகரை அடுத்துள்ள ஸான்ஸியன் தீவையடைந்தார்கள் அங்கு அவர்களுக்குக் கடினமான ஜுரம் ஏற்பட்டமையால் 1552 டிசம்பர் 2ந் தேதி பிற்பகல் சுமார் 2 மணிக்கு 46 வயதில் இறைவனடி சேர்ந்தார்கள்.

அவர்களுடைய எலும்பை மட்டும் கோவாவுக்கு கொண்டுபோக வேண்டும் என்ற நோக்கத்துடன், சடலத்தைப் பெட்டியில் வைத்து மாமிசத்தை விரைவில் தின்னக்கூடிய சுண்ணாம்பை ஏராளமாகப் பெட்டியில் திணித்த பின்னர், பெட்டி அத்தீவிலேயே அடக்கம் செய்யப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு கல்லறையைத் தோண்டிப் பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது சற்றும் அழியாமலும், நித்திரையில் ஆழ்ந்திருக்கும் பாவனையில் சடலம் காட்சியளித்ததுடன், அதிலிருந்து சுகந்த நறுமணம் வீசிக் கொண்டிருந்தது. அதன் பின்னர் சடலம் மலாக்காவுக்குக் கொண்டு போகப்பட்டு அங்கேயும் வெறுந் தரையில் புதைக்கப்பட்டு, பல மாதங்களுக்குப் பிறகு பார்த்தபோது அதே நிலைமையில் இருந்தமையால், அந்தப் பரிசுத்த சடலத்தை அங்கிருந்து கப்பலிலேற்றி 1554 மார்ச் 15ந் தேதி கோவாவுக்குக் கொண்டு சேர்த்தனர். அன்று தொடக்கம் இன்றுவரை அங்குள்ள தேவாலயத்தில் அத்திருச் சடலம் வைக்கப்பட்டிருக்கிறது.

### வலது கரம்

1614ம் ஆண்டில் திருச்சடலத்திலிருந்து தனியாக எடுக்கப்பட்ட வலது கரம் 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, பெரிதாயிருந்த பகுதி மட்டும் ரோமுக்கு எடுத்துச் செல்லப்பட்டது அன்று திருச்சடலத்தின் தலையிலிருந்த தலைப்பாகை இன்று காணப்படவில்லை அது போர்த்துகலில் மரியா என்ற ராணிக்கு அனுப்பப்பட்டதாக கூறப்படுகிறது.

அர்ச் சவேரியார் அவர்கள் காலமாகி 400 வருடங்களாகிய பின்னரும் அவரது திவ்ய சடலம் அழியாமலிருந்துவருகிறது. முன்பு அத்திருச்சடலத்தைப் பரிசோதனை செய்த பிரபல டாக்டர்கள் பிரேதங்களை அழிந்துபோகாது பாதுகாப்பதற்கான வைத்திய முறைகள் எதுவும் இத்திருச் சடலத்தில் என்றும் அனுஷ்டிக்கப் பட்டிருக்கவில்லையென்பதை திட்டவட்டமாக ஊர்ஜிதம் செய்தார்கள்.

கத்தோலிக்க திருச்சபையின் தர்ம தூதர்களான பரிசுத்தவான்களில் ஒருவரான அர்ச் சவேரியார் அற்புதங்களை நிகழ்த்தக் கூடிய மகத்தான சக்திகளைப்பெற்றிருந்தார்.

### நிரந்தரமாக மூடப்படும்

இம்முறை திவ்ய தரிசனம் முடிந்த பின்னர், திருச்சடலம் வைக்கப்பட்டிருக்கும் ஸ்வர்ணமய பேழை நிரந்தரமாக மூடி சீல் வைக்கப்படும் என்று பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது

இன்று (7ந் தேதி) இலங்கையிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்கள் அனைத்திலும் அர்ச் சவேரியார் விழா விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

---

## இஸ்லாத்தைப் பிரசாரம்......

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சொத்துக்கள் பெரும்பாலும் பள்ளி நிர்வாகிகள் வயிற்றுக்குள் போய் விடுகிறது.

வெள்ளிக்கிழமை ஜும்ஆ பிரசங்கத்தின் போது சிலகத்திபுகள், 300 ஆண்டுகளுக்குமுன் அறபுத்தமிழ் கொத்பாப் பிரசங்கத்தைப் படிக்கின்றனர். அந்த கொத்பாப் பிரசங்கத்துக்கு எழுவாயுமில்லை! பயனிலையுமில்லை! ஆகவே, கொத்பாப் பிரசங்கத்தைப் படிப்பதைவிட படிக்காமலே இருக்கலாம். பள்ளிவாசல் பிரசங்க மேடையில் நின்று கொத்பாப் பிரசங்கம் செய்கிறவர்கள் அரசியல், மதம், நபிகள் நாயக வாழ்க்கை, சமூகச் சீர்திருத்தம், இஸ்லாமிய சரித்திரம், முஸ்லிம்களின் வீரம், மக்களின் சுகாதாரம், ஒழுக்கம், இஸ்லாமியக் கலைப் பண்பாடு, முஸ்லிம் மன்னர்களின் தன்மை, கலீபாக்களின் ஆட்சி நடந்த சீரிய முறை இதுபோன்ற விஷயங்களைப் போதிக்கவேண்டும். பள்ளிவாசல்மூலமாக இஸ்லாமியப் பிரசாரம் செய்ய எவ்விதப் பணச்செலவும் கிடையாது. இலங்கை வாசிகளான நல்ல மௌல்விகள் இருக்கின்றார்கள். கூடுமானவரை இவர்களையோ, இவர்களைப் போன்ற மற்றும் நாட்டு மௌல்விகளையோ நியமிக்கலாம். பள்ளிவாசல் பிரசங்க மேடையில் நின்று பேசும் ஒருவர் நபிகள் நாயகத்தின்—பீடத்தில் நின்று பேசுகிறார். ஆகவே அவர் நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல்வேண்டும். முஸ்லிம்களும் அந்த பேஷ் இமாமுக்கு தகுந்த மரியாதை கொடுக்க வேண்டும். பள்ளிவாசல்களின் கத்திப் மார்களுக்கு கடைகள் தோறும் அல்லது வீடுகள் தோறும் சாப்பாடு கொடுக்கும் முறை விரும்பத்தக்கதல்ல. இந்த முறையால் அந்த பேஷ் இமாமின் கண்ணியம் குறைவுபடுகின்றது. அறபிப் படித்த முஸ்லிம்களையும், சமூகம் இப்படித்தானே செய்யுமென்று தவறாக நினைத்துப் பல செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகளுக்கு அலிப், பே, தே, என்ற மூன்று எழுத்துக்களுங் கூடத் தெரியாது. நான் எழுதிய கூற்றின் [illegible] களை அறபி [illegible] கொடுக்கும், மத்ரஸாக்களிலாவது, அல்லது "மக்தப்" களிலாவது பார்க்கலாம். ஏழைகளும் அனாதைகளுமான முஸ்லிம் மாணவர்களே அதிகம் இஸ்லாத்தின் மீது பற்றுக்கொண்டு, 10 ஆண்டுகள்வரை சிரமத்துடன் அறபிக் கல்வியைப் பயிலுகின்றனர். இவர்களுக்கெல்லாம் இறைவனிடம் சன்மானமுண்டு இவர்களே வருங்கால மார்க்கத் தியாகிகள்! தங்கத்தை வைத்திருப்பவன் பிரயோஜனமடைகின்றான் அந்தத் தங்கத்துக்கு யாது பிரயோஜனமும் இல்லை. அதேபோல், மார்க்க அறிஞர்களாகிய இவர்கள் பிறருக்குச் சதா பிரயோஜனத்தைக் கொடுத்துக்கொண்டிருப்பவர்கள்.

இச்சிறியேனுடையமேற்கூறிய கருத்தை முஸ்லிம் சமூகம் பின்பற்றுமானால் செலவில்லாத முறையில் இஸ்லாத்தைப்பற்றி முஸ்லிம்களிடையே பிரசாரம் செய்யலாம்.

'நன்மை செய்துகொண்டு, எவன் தனது எண்ணத்தை இறைவனிடம் சரணடையச் செய்கின்றானோ அவனுக்கு இறைவனி[illegible] அவன் [illegible]

(அல்-குர் ஆன். 2: 112)

---

## கவிராயர்.........

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பாடியிருப்பாரானால் அது இன்றுள்ள அளவுக்குச் சோபிக்குமா என்பது ஐயப்பாடுதான். வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியையே நினைவிக்கொண்டு அந்த உணர்ச்சியிலேயே திளைத்துப் பாடியதால்தான் அண்ணாமலை ரெட்டியாரது கவிதைகள் அழியா இலக்கிய வரிசையில் இடம்பெற்று மிளிர்கின்றன

---


## அமிர்தா வாய்வு சூரணம்

இது சகலவிதமான வாய்வு தொந்தரவு, வயிற்று வலி, புளிச்சஏப்பம், வாந்தி அஜீரணம், இடுப்புவலி, முதுகுவலி, பசியின்மை, சூதகவயிற்றுவலி, இருமல் இளைப்பு, ஆஸ்த்மா முதலிய வியாதிகளுக்குநிச்சயநிவாரணி. கர்ப்பஸ்திரீகளுக்கோர் நல்ல மருந்து.

டின் விலை ரூ 2-00. தபால் செலவு வேறு.

## நேத்திரரீ அமிர்த தைலம்

இதை நாள்தோறும் பாவித்துவந்தால் பீனிஸம் ஒருதலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, தூக்கமின்மை, மாலைக்கண், கண்கூச்சல், கண்ணெரிச்சல், நீர் வடிதல் முதலிய வியாதிகள் சுகமாகும். அளவுக்கு மிஞ்சிய உஷ்ணத்தை தணிக்கும். கண்களுக்குப் பிரகாசத்தையும், கூந்தலை அழகாகவும், கறுப்பாகவும் வளரச் செய்யும்

12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 4-50.
6 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 2-50.
தபால் செலவு வேறு

T. K. (டி. கே.) "மார்க்" இருக்கிறதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்.

## செல்லராஜா அன் கோ.

பாக்கியலெக்ஷ்மி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு, கொழும்பு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யோகி சுத்தானந்த பாரதியார்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வெளியேறியதாக பத்திரிகையில் படித்தேன் இதெல்லாம் யோகிகளின் "பொறுமை"க்கு அடையாளம். தமிழ் நாடு நிருபரின் பொறுமையைப் பற்றித்தான் அன்பர் சுப்பராமன் அலசி விட்டாரே?

ஒரு சிலரை எப்போதும் ஏமாற்றலாம் எல்லோரையும் சில காலத்திற்கு ஏமாற்றலாம்; எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் நாடு நிருபர் சுத்தானந்தரைப் பற்றி நடுநிலையாக எழுதியிருப்பதாகவே நான் நினைக்கிறேன். அவர் பாராட்டிக் கூறியிருப்பதை மறுபடியும் விளம்பரப் படுத்திக் கொள்ளும் மு. சுப்பராமனூர் மற்றதைப் பிழை என்கிறார். கொள் என்றால் ஆ என்று வாயைத் திறப்பதும் கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்வதும் இவருடைய கொள்கைபோலும்

மே. பொன்னையா
ஹல்ஸ்டார்ப், கொழும்பு

## (2)
## யோகி வெகுளலாமா?

சுத்தானந்த பாரதியார் யோகசித்தி பெற்றவர் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர் இன்னும் வெகுளியை வென்றவராகத் தெரியவில்லை. வெகுளியை வென்று சாந்தம் அடையாத ஒருவர் எவ்வளவு துறவு சாதனைகளில் ஈடுபட்டபோதிலும் பயன் என்ன? எடுத்ததற்கெல்லாம் சினம் கொள்வதும், பேச்சின் போதெல்லாம் 'நான் அதைச் செய்தேன், நான் இதைச் செய்தேன்' என்று நான் நான் என்று ஆணவம் கொள்வதும் யோகியாருக்கு ஏற்ற செயல்களா? மானிப்பாயில் அளித்த வரவேற்பின் போது நன்றி கூறியவரின் அபிப்பிராயங்கள் சில பிடிக்காமல் யோகியார் கூட்டத்தைவிட்டு வெகுண்டு வெளியேறினாராம்.

வந்தாறுமூலையில் நடைபெற்ற வரவேற்பில் கூட்டத்தில் இருந்த பெண்களும் குழந்தைகளும் சிறிது இரைச்சல் போட்ட போது யோகியாருக்கு கோபம் வந்துவிட்டதை நான் நேரில் கண்டேன். அதன் காரணமாக வந்தாறுமூலை மக்கள் மிகவும் பிரயாசையின் பேரில் செய்து வைத்திருந்த வரவேற்பு பேழையைப் ஏற்றுக் கொள்ளாமல் சென்றுவிட்டார் யோகியார்

"இணர் எரி தோய்
வன்ன இன்னா
செயினும்
புணரின் வெகுளாமை
நன்று"

என்ற குறளை யோகியார் அறிந்திருப்பார் என்று நம்புகிறேன். இங்ஙனம் வந்தாறுமூலை "ஞாபா" பட்டக்களப்பு.

## [3]
## சுத்தானந்தருக்கு ஒரு பட்டம்!

"தாடையாச் சங்கனம் தன் படரிக்குச் சேதம்" என்று ஒரு பழமொழி இலங்கையில் வழங்கப்படுவதுண்டு. இந்தப் பழமொழியைச் சுத்தானந்த பாரதியார் அறியார் போலும். அதனால்தான், தான் அறியாத சிங்களப் பாஷையில் வெளியாகும் 'தினமின' 'சிலுமின' போன்ற ஏரிக்கரையின் சிங்களப் பத்திரிகைகள் 'நவ இலங்கையை நிர்மாணிப்பதற்கு சிறந்த தொண்டைச் செய்து வருகின்றன. இப்பத்திரிகைகள் மேலும் மேலும் முன்னேறி நற்பயன் அளிக்க வேண்டும்' என்று வாழ்த்தினார் பாவம், தானறியாச் சிங்களப் பத்திரிகையின் கோஷ்டியில் சேர்ந்த தினகரன் தமிழ்ப் பத்திரிகையால் பிடரியில் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறார். அதாவது சுத்தானந்தருக்குத் தமிழ் தெரியாது; தமிழ் மரபு தெரியாது; தமிழ்க் கவிதை தெரியாது என்ற செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து, சுத்தானந்தர் இலங்கைத் தமிழறிஞருக்குப் பட்டம் வழங்கத் தகுதியற்றவர் என்று மறைமுகமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறது இந்தத் தினகரன் பத்திரிகை

சுத்தானந்தரின் வாழ்த்து தமக்கே வினையாக முடிந்தது அவருக்கு "நற்பயன் தரும்" ஒரு நல்லபாடம். குயுக்தியார் சரியாக அளவிட்டுக் கூறியபடி இனியேனும் சுத்தானந்தர் கூழுக்குப் பாடிக்கொண்டு திரியாமல் அவர் அபிப்பிராயங்களை எடையிட்டு வெளியிடுவாராக தினமினவும் சிலுமினவும் சுத்த வகுப்பு வாத வெளியீடுகள் என்பதை சிங்கள பாஷையை எதிர்காலத்தில் கற்றுக் கொண்டாவது சுத்தானந்தர் அறியட்டும்.

கே. சுந்தரமூர்த்தி
வெள்ளவத்தை
4-12-52

## [4]
## தமிழ்ப்பட்டம்

சுவாமி சுத்தானந்தராயிருந்தவர் யோகி சுத்தானந்தரானார் ஆனால் அது போதாதென்று தினகரன் பத்திரிகை அவருக்கு "தமிழ் வியாசர்" என்று ஒரு புதிய பட்டத்தைக் கட்டியது. இதனால் புளகாங்கிதமடைந்த 'தமிழ் வியாசர்' தினகரன் ஆசிரியருக்கு ஒரு பட்டத்தைக் கட்டினார். 'கவர்ச்சிவாய்ந்த தமிழ் நடை' யை எழுதும் ஆசிரியர் என்றார். ரொம்ப சரி.

சோமசுந்தரப் புலவருக்கு ஒரு பட்டத்தைக்கட்டிவிடலாமென்று பார்த்தார் சுத்தானந்தர். ஆனால் சோமசுந்தரப் புலவரோ சுத்தானந்தருக்குப் பட்டங் கட்டிவிட்டார். "திரு சுத்தானந்தர் அவர்கள் செந்தமிழ் மொழியை வரம்பழித்தும் பழைய இலக்கணங்களும் இலக்கியங்களும் வேண்டாமென்றும் புதிய மரபில்லாத தமிழ் ஆனி வேண்டுமென்றும் அழுங்கு முகநூச் செய்பவர்கள் பாட்டின் மரபும் திறமும் தெரியாதவர்கள்" என்று பட்டஞ் சூட்டிவிட்டார்.

அதாவது "தமிழ் வியாசர்"க்குத் தமிழ் தெரியாது என்று சொல்லிவிட்டார்.

அப்படியானால் சோமசுந்தரப் புலவரின் கூற்றுப்படி தமிழ் மரபு தெரியாத ஒரு திருவாளர் சூட்டிய "கவர்ச்சிவாய்ந்த தமிழ்நடை எழுதும் ஆசிரியர்' என்ற பட்டத்தின் கதியென்ன? 'தமிழ் மரபு தெரியாத' ஒருவர், 'செந்தமிழ் மொழியை வரம்பழித்தவரும்' ஒருவர் கவர்ச்சிகரமான தமிழ் நடைக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்க முடியாதல்லவா?

சுத்தானந்தர் தமிழ்வியாசர் என்பதையும், தமிழ் தெரியாத ஒரு திருவாளா என்பதையும் பிரமாதப் படுத்திப் பிரசுரிக்கும் அந்த ஆசிரியரின் தருக்க ஞானம் தான் என்னே! என்னே!

"தருக்கவாதி"
அச்சுவேலி
5-12-52

## (5)
## தவருன செய்தி

மானிப்பாய் வரவேற்பில் சுவாமி சுத்தானந்தர் வெகுண்டு வெளியேறினார் என்ற ஒரு செய்தியை ஏரிக்கரைப் பத்திரிகைகள்—விசேஷமாகத் தினகரன்—பிரசுரித்தன. இது ஒரு தவருன செய்தியாகும் இத் தவறைக் குறித்துப் பல கடிதங்கள் தினகரன் ஆசிரியருக்கு எழுதியும் அவர் அதைப் பிரசுரிக்கவில்லை எனவே தயவுசெய்து சுதந்திரன்மூலம் உண்மையை வெளிப்படுத்துவீர்களா?

திரு நாகையா என்பவர் இந்து ஆலய பரிபாலன விசாரணைக் கமிட்டி அரசாங்கத்தரால் நியமிக்கப்பட்ட காலத்தில் கோயில் முதலாளிகள், பிராமணர் ஆகியோரின் ஆதரவு கொண்டு ஹரிஜன ஆலயப்பிரவேசம் முதலிய சீர்திருத்தங்களை எதிர்த்தவர். சுவாமி சுத்தானந்தரின் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கை சற்றும் பிடியாதவர். மானிப்பாய்க் கூட்டத்தில் நன்றி கூறும் சந்தர்ப்பம் இவருக்கு கிடைத்தபோது இவர் சுவாமியின் கொள்கைகளைத் தாக்க முற்பட்டார். எனினும் சுவாமிகள் கோபமோ வெறுப்போ அடையவில்லை. 6-00 க்கு முடிய வேண்டிய வரவேற்பு 6-45 வரை நீண்டுகொண்டே போனது 6-00 க்கு சுவாமிகள் வட்டுக்கோட்டை வரவேற்பில கலந்துகொள்ளவேண்டியிருந்தது அங்கு போய்ச்சேர 15 நிமிஷமாவது வேண்டும் ஆனால் சபைத் தலைவர் பல தடவை தடுத்தும் திரு நாகையா பேசிக்கொண்டேபோனார். சுவாமிகள் அவர் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறும் பதாகவேயிருந்தார். ஆனால் திரு நாகையா முடிவில்லாமல பேசிக்கொண்டு போனதாலும், அடுத்த வரவேற்புக் கூட்டத்துக்கான நேரம் போய்விட்டதாக சுவாமிகளை வற்புறுத்தியழைத்ததாலும் சுவாமிகள் மேடையை விட்டிறங்கினார்கள் சுவாமிகள் வெகுண்டு வெளியேறவில்லை.

கூட்டமுடிவில் தலைவர் திரு நாகையாவை மிகவும் கண்டித்தார் "சாதனையற்ற சமயம் பேசும் சைவர்கள்" என்று குறிப்பிட்டது திரு நாகையாவையே.

கூட்டத்திலிருந்த வேறு பலரும் திரு நாகையாவைக் கண்டித்தனர். இதனால் ஏமாற்றமுற்ற திரு நாகையாவிற்கு, தம் சொந்தப் பெயரை ரிப்பெயர் செய்திருக்கும் ஒரு பிற்போக்குப் பண்டிதர்மூலம் தினகரன் கைகொடுத்தது.

20-ந் திகதி நடந்த கூட்டம் தினப் பத்திரிகையான தினகரனில் 25-ந் திகதி தான் வெளியாயிற்று. பின் யோசனையால் நடந்த கயிறு திரிப்பே இந்த தவருன செய்தி.

கு சுப்பிரமணியம்
(நேரில கண்டவன)
வட்டுக்கோட்டை
3-12-52




# பம்பாயில் ஜூபிட்டர் 'ராணி'' க்கு தடை!

இந்தியாவில் சினிமா பிடிக்க ஆரம்பித்த காலத்திலிருந்து இதுவரை நடக்காத ஒரு அற்புத நிகழ்ச்சி சமீபத்தில் ஜப்பல்பூரில் நடந்திருக்கிறது.

சென்னை ஜூபிடர் பிக்சர்ஸாரின் 'ராணி' என்ற ஹிந்திப்படத்தை இந்திய ராணுவத்தினர் பார்ப்பதற்கு தடை செய்யவேண்டும் என்று தென்கமாண்ட் ராணுவத்தினர் நடவடிக்கை எடுத்ததற்கிணங்க அதன்படியே சென்ஸார் உத்தரவு பிறப்பித்துள்ளனர். இந்திய ராணுவத்தின் சரித்திரத்திலேயே ஒரு படத்தை ராணுவத்தினர் மட்டும் பார்க்க கூடாது என்று ஆட்சேபித்தது இதுவே முதல் தடவை.

பானுமதி நடித்த ஜூபிடரின் ஹிந்தி "ராணி" ராணுவத்தினரின் கீழ்ப்படிதலையும் ஒழுக்கத்தையும் கெடுத்து கீழ்த்தர உணர்ச்சியை உண்டாகக் கூடியதாக இருக்கின்றது என்ற காரணத்தைக் கூறித்தான் ராணுவத்தினருக்கு மட்டும் 'ராணி' தடை செய்யப்பட்டிருக்கிறது. இந்தநடவடிக்கையைக்கண்டு பட முதலாளிகளும், தியேட்டர்காரர்களும் மட்டும் ஆச்சரியப்படுவது விசேஷமல்ல. சினிமா ரசிகர்கள் எல்லோருமே பிரமித்துப்போக வேண்டியிருக்கிறது. 'ராணி' ராணுவத்தினரை பாதிக்கிறுளா இல்லையா என்பது அவர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் அதில் ரசிகர்கள்தலையிட்டு அபிப்பிராயம்கூறவேண்டிய அவசியமில்லை. ஆனல் அதே 'ராணி கதை ஹாலிவுட்டில் டெக்னிகலரில் பிடிக்கப்பட்டு இதைவிட ஆயிரமாயிர மடங்கு ஆபாஸ காட்சிகளுடனும், அரை நிர்வாண ஆடைகளுடனும் 'ராணி' யில் வரும் ராணுவ ஒழுங்கைக் கெடுப்பதாகச் சொல்லப்படும் சம்பவத்தைவிட பல கொடூரமான சம்பவங்களுடனும் வெளிவந்து இன்னும் இந்தியாவில் பல பாகங்களில் ஓடிக் கொண்டிருப்பதை சென்ஸார் போர்டும் ராணுவத்தினரும் மறந்துவிட்டு இருப்பதுதான் நமக்கு விசித்திரமாக இருக்கிறது.

காம உணர்ச்சியைக் கிளறும் விதத்தில் நடிப்பதில் கைதேர்ந்த உலகப் பிரசித்திப்பெற்ற "ரீடா ஹேவொர்த்' கதாநாயகியாகக் கொண்டு "லவ்ஸ் ஆப் கார்மன்" என்ற பெயரிலே ஓடும் 'ராணி யின் மூலக் கதை ராணுவத்தினரை மட்டுமின்றி இந்திய கலாச்சாரப்படி வயது வராதோருக்கும் ஒழுக்கக் கேட்டை உண்டாகக் கூடிய படமென்பதை நடவடிக்கை எடுத்தவர்கள் தெரியாமலிருக்கிறார்களா என்பது புரியவில்லை.

பாரத மாதா பலத்த பாதுகாப்பளிக்கிறது எப்படி?,

விபரங்களுக்கு மனுச்செய்க

அகில இந்தியாவிலும், இலங்கையிலும் முன்னணியில் நிற்கும் ஓர் பிரபல பிராவிடண்ட் இன்ஷுரன்ஸ் கம்பெனி

எல்லா பகுதிகளிலும் கண்ணியம் வாய்ந்த ஏஜண்டுகள் தேவை

பாரத மாதா பிராவிடன்ட் அஷ்யூரன்ஸ கம்பெனி லிமிட்டெட்

117-119, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப்பாருங்கள்

குயுக்தி

★ எம் சுப்பையா,
அங்கும்பிற்றியா

கே: மனிதர்கள் மதிக்கமுடியாத மாணிக்கங்கள் என்கிறார் ஒரு அறிஞர். உமது அபிப்பிராயமென்ன?

ப: அசலைத்தான் நாற்றுக்கணக்கான மாணிக்கங்கள் நமது யு. என் பி. ஆட்சியில் குடியிருக்க வீடு கிடையாமல் தெருவோரத்தில் புழுதியில் கிடந்து புரளுகின்றன.

ஃ

அ. கலந்தர்,
மட்டக்களப்பு

கே: ஒரு புருஷன் தன் மனைவிக்குச் செய்யும் கடமைகளில் இன்பமான கடமை எது?

ப: தன் மனத்திலே தன் மனைவியைத் தவிர இன்னொரு பெண்ணுக்கு இடமளிக்கவில்லை, இடமளிக்கப் போவதுமில்லையென்று அவள் உணரும்படி நடப்பதுதான்.

ஃ

ஏ. எம். எம். உவைஸ்,
திகாரிய

கே: கடவுள் நினைப்பது போல் மனிதர்கள் எல்லாரும் நடந்தால் கடவுள் என்ன செய்வார்?

ப: வானுலகத்தை விட்டு விட்டு நிர்ப்பயமாக அவர் இந்த உலகத்தில் வந்து குடியேறிவிடுவார்.

ஃ

கே. பாலசுப்பிரமணியம்,
நிவிட்டிகல

கே: வவுனியா அங்கத்தவர் திரு ஸி. சுந்தரலிங்கத்தை இலங்கையின் மன்னராக்கினால் அவர் முதலில் என்ன காரியம் செய்வார்?

ப: முதலில் தமது மன்னர் பதவியை ராஜிநாமாச் செய்வார் பின்பு மன்னர் பதவிக்கு ஒரு உபதேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறலாமா என்று பார்ப்பார்.

கே: பெண்கள் ஆண்களைக் கீழ்க்கண்ணால் பார்க்கிறார்களே, அது ஏன்?

ப: சட்டைப்பையுள் எவ்வளவு இருக்கிறது என்பதை எப்படி மேற்கண்ணால் பார்த்துக் கண்டு பிடிப்பது?

ஃ

எம். வி பெருமாள்,
பருத்தித்துறை

கே: தெரிவுப் பரீட்சையென்றால் என்ன?

ப: விடைகளை முன்பு வெளியாக்கிவிட்டு பின்பு கேள்விகளைக் கேட்கும் ஒருவித கண்கட்டு வித்தை!

ஃ

எம். புண்ணியவதி,
புன்னாலைக்கட்டுவன்

கே: மரணம் என்றால் என்ன?

ப: இன்னும் மாற்று மருந்து கண்டு பிடிக்கப்படாத ஒருவித நோய்.

ஃ

மு கணபதிப்பிள்ளை,
சாரையடி

கே: வாழ்க்கையென்றால் என்ன?

ப: ஒவ்வொரு நாளும் பணத்தைக் கொட்டி டிக்கட்பெற்று மரணம்வரை பார்க்க வேண்டிய ஒரு துன்ப நாடகம்.

ஃ

கா. சுப்பிரமணியம்,
தேற்றாத்தீவு

கே: படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் இதற்கு உதாரணம்?

ப: மந்திரி நடேசன் கண்ணீர்விடுவது ஏழை இலங்கை இந்தியருக்காக கையுயர்த்துவது யு என் பியின் அநியாய சட்டங்களுக்கு.

ஃ

வி எம். ராமலிங்கம்,
ஹிங்குள

கே: துன்பத்தின் எல்லையெது?

> **பரிசு ரூ. 3-00**
>
> யாரும் கேள்விகளை அனுப்பலாம். ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ரஸமும் மான பதில் கிடைக்கக்கூடிய சிறந்தகேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

ப: நித்திய நித்திரை.

ஃ

க. ரவாத்தினராஜா,
பெரியபுலம்

கே: இலங்கையில் தண்ணீர் பஞ்சம் உண்டாகுமா என்று கவலைப்படுகிறேன்?

ப: ஏன். ஐயா, நீர் ஓர் பால்வியாபாரியா?

ஃ

சு. முத்துலக்ஷ்மி,
கந்தர்மடம்

கே: தற்காலத்து மாணவிகளைப்பற்றித் தங்கள் அபிப்பிராயமென்ன?

ப: ரொம்ப நல்லவர்கள், கெட்டிக்காரர்கள், அலங்காரப் பிரியர்கள், வீட்டு வேலையென்றால் ஓட்டம் பிடிப்பவர்கள், அதனால் காப்பி தயாரிக்கச் சொன்னால் கஷாயம் தயாரிக்கும் சாமர்த்திய சாலிகள்.

ஃ

மு திருநாவுக்கரசு,
அளவெட்டி

கே: உம்மிடம் நித்திரையில் ஓர் தேவதூதன் வந்து உமக்கு யாதுவரம் வேண்டும் என்று கேட்டால் நீர் என்ன கேட்பீர்?

ப: "ஐயா தேவதூதரே, நான் இப்பொழுதுதான் ஆயிரம் குயுக்திக் கேள்விகளை ஆராய்ந்துவிட்டு அலுத்துப்போய்ப் படுத்திருக்கிறேன். தயது செய்து என் தூக்கத்தைக் குழப்பாமல் போய்விடும். அந்த வரம் ஒன்றே போதும்" என்பேன்.

கே: நீர் கல்வி அமைச்சர் ஆனால் செய்யும் முதல் காரியம் என்ன?

ப: முதல் காரியம் பரீட்சையென்ற கேலிக் கூத்தை நிறுத்துவது.

ஃ

ஏ. எம். தாஸீம்,
ருக்கஹபிலை

கே: கிராமவாசம் நல்லதா நகரவாசம் நல்லதா?

ப: கிராமவாசம் ரோக நாசம், நகரவாசம் நரக வாசம்

ஃ

ஐ எம். இப்ராஹீம்
அக்கரைப்பற்று

கே: கடவுள் மனிதனைக் காப்பாற்றுகிறாரா? அன்றி மனிதன் கடவுளைக் காப்பாற்றுகிறானா?

ப: இரண்டும் நடைபெறுகிறது ஆனால் கடவுள் தன் தொழிலை எதுவித சலசலப்புமின்றி அமைதியாகச் செய்து வருகிறார். பாவம், மனிதனோ கடவுளைக் காப்பாற்றும் விஷயத்தில் கத்தி கட்டிக்கொண்டு முழங்குகிறான்!

ஃ

ந. பஞ்சாட்சரம்,
யாழ்ப்பாணம்.

கே: ஈழத்தின் ஏனைய பாகங்கள் அனைத்திலும் அன்புடன் வரவேற்கப்பட்ட மகரிஷி சுத்தானந்தரை சில பதர்கள் எதிர்த்ததினால்தான் சூறுவளி வீசிற்று யாழ்ப்பாணத்தில் என்று சிலர் கூறுகின்றார்கள். இதில் உண்மையுண்டா?

ப: இருக்கலாம்; பெரியவர்கள் மனம் துன்புற்றால் இயற்கை வெகுண்டெழுந்து தண்டிப்பது இதிகாசங்களில் உள்ள சம்பவந்தான்

---

★ இவ்வாரம் ரூபா 3-00 பரிசு பெற்றவர்.


# முருகன் தியேட்டர் (ஜிந்துப்பிட்டி)

## சலனப்பட சரித்திரத்தில் ஓர் புதுமைச் சித்திரம்



சனி, ஞாயிறு பிற்பகல் 3 மணி. மாலை 6 மணி
இரவு 9-30 மணி-ஞாயிறு காலை 10 மணிக்கு விசேஷ காட்சி.
தினசரி மாலை 6-30 மணி இரவு 9-30 மணி

- பயமறியாப் பாலனாக— தொல்லை தரும் பிள்ளையாக விளங்கினான் அமர். தந்தையின் பணக் காதலையும் அந்தஸ்து மோகத்தையும் பகைத்தார்.
- ஷம்பயோ நடன சிங்காரி மயிலிடைக்காரி. ஒயில் நடை அழகி. கண்வலை வீசினாள். காதற் சுவையூட்டினாள்.
- ஆனால் அந்நறுமணத்தை—அதன் ஒப்பற்ற சுவையை உணர்ந்தானில்லை அவன். பிறகு...........?

## வெள்ளித் திரையே சாக்ஷி

நஸீர்கான்-ஷியாமா-அன்வார்
அச்சலா-ஷியாம்லால்-லலிதாபவர்
முதலியோர் நடித்த

## ஹிந்திக் கதைதான்....

# ஆஸ்மான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தன் நயம்

மனித வர்க்கத்தின் மதியை, மதிப்பை, நிதியை மாசுபடுத்தும் தீய குணங்களுள் தன்நயமும் ஒன்ருகும். இதனுல் ஏற்படும் பாரதூரமான விளைவுகள் சொல்லில் அடங்கா.

இன்று ஒவ்வொரு மனிதனிடமும் இக்குணம் காணப்படுகிறது ஒவ்வொருவனும் தன் தினசரி வாழ்க்கையில் இதைக் கையாள்கிருன். அதனுல் எல்லோரும் சுயநலப் பேர்வழியாய் இருக்கின்றனர். எதற்கும் "தான், தன் வீடு, தன் குடும்பம், தன் சொத்து" என்று தன்நயத்தைக் காட்டுகின்றனர். இது "தான்" என்ற அசந்தையை வெளிப்படுத்துகிறது. அதனுல் 'ஐக்கியம்' குலைகிறது. தன்நயம் கருதுகிறவன் பிறருடன் ஒத்து வாழமாட்டான் அவன் மனம் அதற்கு இடம் அளிக்காது. மனிதனுக்கு மனிதன் உதவ வேண்டும் என்ற பரஸ்பர நல்லெண்ணம்கூட எழாது. தேசம் முன்னேற்றம் அடைய முடியாது போய்விடும். குறுகிய புத்தியும், குறுகிய மனப்பான்மையும், குறுகிய நோக்கமும்தான் ஒவ்வொருவரது உள்ளத்தையும் ஆட்சி புரியும் அதனுல் ஏற்படும் சூழ்நிலையிலே அசூசையும், அதிருப்தியும், ஆணவமும்தான் தெளிவாக விளங்கும். மனிதப் பிறவி எடுத்ததின் பயனே மங்கி மறைந்து விடும்.

தன்நயமற்றவன் சமாதானத்துடன் வாழ முடியும். அவனுக்கு அமைதி உண்டு. அவனிடம் எல்லோரும் தட்புக்கொள்வர். அவன் பயன் கருதாத பரோபகாரியாய் திகழ்கிருன். தன்நலத்தைக் கருதாது பிறர் நலத்தைக்கருதி மகத்தான சேவை செய்கிருன். உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிறருக்காக அர்ப்பணம் செய்வான். அதனுல் அவன் எல்லோரது அன்பையும் கவர்கிருன், போற்றப்படுகிருன், புகழும் பெருமையும் அவனிடம் அடைக்கலம் புகும். எல்லோரும் இங்ஙனம் இவ்விதம் வாழ வழி வகுத்துக்கொண்டால் நாட்டிலே சமூக ஒற்றுமை ஏற்பட்டு, நல்னிலை அடைந்து, மகிழ்ச்சியுடன் மக்கள் வாழ வழி பிறக்கும் இன்று உலகம் கொந்தளிப்பான நிலையை அடைந்ததற்குக் காரணம் தன்நயந்தான்! ஆகையால் ஒவ்வொருவரும் தன்நயம் என்னும் பேய்க்குணத்தை குழிதோண்டிப் புதைக்கக் கங்கணம் கட்டவேண்டும், இலட்சியம் கொள்ளவேண்டும், கொள்கை அமைத்துக் கொள்ளவேண்டும். 'தான்' என்ற நிலைமாறி 'நமது' என்ற நிலை வரவேண்டும். அன்றுதான் தன்நயம் ஒவ்வொருவரது உள்ளத்திலிருந்தும் அகலும். அப்பொழுதுதான் ஒரே இனம், ஒன்றே தேவன், எல்லோரும் சமம் என்ற நிலை வேரூன்றி நிற்கும். நாடு செழித்து வளமடையும். மக்களிடையே செளஜன்ய உறவு ஏற்படும்.

"தமிழன்பன்"

அவிசாவெல்ல

## தன்னம்பிக்கை

நமது முன்னேற்றத்திற்கு எதிர்கால நல்வாழ்வுக்கு தன்னம்பிக்கை மிக மிக அவசியமாகும். தன்னம்பிக்கை இருந்தால் எப்படிப்பட்ட கடினமான வேலையையும் எளிதில் செய்துகொள்ள முடியும். தன்னம்பிக்கை இல்லையெனில் எதிலும் எந்த முயற்சியிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தோல்வியாகவே முடியும் தன்னம்பிக்கை இழந்து வாழும் எவருக்கும் வெற்றிகிடைக்கும் என்றே சொல்ல முடியாது. ஒவ்வொரு உலக அறிஞர்களும், விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும், தன்னம்பிக்கையால், முயற்சியால் வெற்றிபெற்று முன்னேறியிருக்கிருர்கள் என்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிருேம், கேள்விப் படுகிருேம்· அந்த முன்னேற்றத்தில் வெற்றிகண்டசாதனங்களை நாம் இன்று நேரில் காண்கிருேம்.

சாதாரணமாக ஒரு சிறிய வேலையையே எடுத்துக்கொண்டாலும் 'அடேயப்பா இதை எப்படிச் செய்கிறது? இதை யாரால் செய்ய முடியும்? இது என்னுல் செய்ய முடியாது என்று பின்வாங்குகிருர்கள் சிலர் அது தவறு! தம்முடைய வலிமையை தன்னுல் நம்ப முடிவதில்லை அவர்களுக்கு! என்ன கோழைத்தனம்?

இதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் ஒரு வேலையைச் செய்ய நாம் முன்வந்தோமானுல் அதில் சிறிதளவாவது வெற்றி காண்பது நிச்சயம். மனதில் எந்த உறுதி தலைதூக்கி நிற்கிறதோ அதுவே செயலில் முடியும். தம்மால் இயலாது என்று எண்ணிக்கொண்டு தம்முடைய முழு பலத்தையுமே கொண்டு அவன் சாதித்தாலும் சரி அது முடியாதுதான்!

இதைச் செய்யவேண்டும் என்ற எண்ணம்—செய்வேன் என்ற ஆர்வமும்—செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் வேண்டும் அப்போதுதான் நாம் வெற்றி பெற முடியும். தன்னம்பிக்கை இல்லாதிருந்தால் விஞ்ஞானிகள் விமானங்களையும்; ரேடியோக்களையும், மின்சாரங்களையும் கண்டுபிடித்திருக்க முடியாது. ஏதாவதொரு வெற்றி கண்டே தீருவோம் என்ற நம்பிக்கையில் அவர்கள் காரியங்களை சாதிப்பதனுல்தான் வெற்றிபெறுகிருர்கள்.

உதாரணமாக—ஒரு படத்தை வைத்துக்கொண்டே கடலுக்குள் ஒரு தீவு இருக்க வேண்டும் என்று முடிவு கட்டினுன் கொலம்பஸ் அதைக் கண்டுபிடிப்பதாக அவன் கடலில் சுற்றினுன். அதைக்கண்டு அவனுடைய பந்துக்கள் கேலி செய்தனர் பைத்தியம் என்றனர் தீவு எங்கேடா, எப்படியடா இருக்கும் என்று கேலி செய்தனர். பலர் அவனுடைய பாதையில் சென்று தீவு இல்லை அது பெரிய கடல்தான் என்று திரும்பி வந்தனர். இத்தனைக்கும் அவன் மனந்தளர்ந்து விடவில்லை என்னவோ ஒரு தீவு இருக்கத்தான் வேண்டும்: எப்படியும் அதைக்கண்டுபிடித்தே ஆகவேண்டும் என்ற நம்பிக்கையை விட்டுவிடவில்லை கொலம்பஸ். அந்த நம்பிக்கைதான் முடிவில் அவனுக்கு வெற்றியைக் கொடுத்தது. அவன கண்டுபிடித்த தீவுதான் அமெரிக்கா!

அதுபோல எந்தக் காரியத்திற்கும் நமக்கு தன்னம்பிக்கை வேண்டும்! அவசியம் வேண்டும்! கண்டிப்பாக வேண்டும்! அதனுல்தான் மகாகவி பாரதியார்,

நம்புவதே வழி என்ற
மறைதனை
நாம் இன்று நம்பி
விட்டோம்

என்று கூறினுர்.

'தமிழ் நேசன்'
50 திருகோணமலை வீதி
கண்டி

## உலகியலறிவு


சிறியோர் முதல் முதியோர் வரையிலும் உலகியலறிவை அறிந்திருத்தல் வேண்டும். தனக்கு உலகியலறிவு இல்லை என்பதை தனது நடத்தையிலேகாட்டுகிருர்.

ஓர் ஊரில் சில வித்துவான்கள் இருந்தார்கள். அவர்கள் ஒருநாள் அவ்வூர் அரச சபையிற் சென்று பிரசங்கம் செய்தார்கள் அவர்களை அரசன் புகழ்ந்து சன்மானம் செய்ய எத்தனிக்கையில் அவர்களின் நிலைமையை உணர்ந்த மந்திரி அரசனை நோக்கி, அரசே! இவர்கள் உலகியலறிவு இல்லாதவர்கள். இவ்வுண்மையைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமானுல் ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து வேண்டிய பொருள்களைப்பெற்று பாகஞ் செய்து புசித்து வரும்படி கட்டளையிடுக என்று கூறினுன் அவ்வாறே அரசனும் பணத்தைக் கொடுத்துக் கட்டளையிட்டனுப்பினுன். அவர்களும் பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றுர்கள் அவர்களில் ஒருவர் 'மோரு, உ, மோரு உஉ' என்று கூவிக்கொண்டு வந்தவரைப் பார்த்து "மோரு என்ற சொல்லை இவ்வளவு நீட்டிச்சொன்னதேன்" என்று தர்க்கஞ் செய்து இறுதியில் வாங்காமலே சென்றுர் மற்றொருவர் தேனீர் சாலைக்குச் சென்று இலையால் செய்யப்பட்டத் தொன்னையில் தேனீர் வாங்கிக் கொண்டு எடபக்கம் வாயில் வைடபதென்று திரும்பித் திரும்பிப் பார்த்து தேனீர் முழுவதையும் கீழே ஊற்றிவிட்டுப்போனுர். மற்றொருவர் ஐஸ் எனும் பனிக்கட்டியைச் சாப்பிட்டால் குளிர்மை உண்டாகுமென்று பனிக்கட்டியை வாங்கி கையில் வைத்திருந்தார். காந்தம் இரும்பைக் கவருவதைப்போல் பனிக்கட்டி நரம்பை இழுத்தது. உடனே அவர் பனிக்கட்டியைச் சாப்பிடாமலே வீசிவிட்டுப் போனுர் மற்றொருவர் காற்றினுல் அடைக்கப்பட்டிருக்கும் ஆரஞ்சுப் போத்தல் வாங்கித் திறந்தார் அதில் காற்றுப் பொங்கியது பேய்ப் போத்தலே நீ என்னை பயமுறுத்துகிருய் இதோ உன்னை சுக்குச்சுக்கலாக்குகிறேன் என்று கல்லில் உடைத்தார். சுற்றில் யாவரும் பசியுடையோராய் அரசனை அடைந்தார்கள். அரசனும் மந்திரியின் அனுபவத்தோடு கூடிய அறிவை மெச்சி அவர்கள் பசியாற உண்ணுவதற்கு உணவு கொடுக்கும்படி கட்டளையிட்டனுப்பினுன் ஆகையால் நாங்கள் உலகியலறிவைத் தேடிக் கொள்ள வேண்டும்

என் பி. பழனிவேல்
மே வகுப்பு ஏ,
அர்ச்சூசையப்பர் கல்லூரி
பண்டாரவளை

## சர்வதேசிய பாலம்

ஆஸ்திரியாவையும் யூகோஸ்லேவியாவையும் இணைக்கும் இந்தப் பாலம் யூகோவை வெளி உலகத்துடன் பிணைத்திருக்கும் ஒரே சர்வதேசிய வாராவதியாகும்.



## சிந்தனைச் சிதறல்

ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமாகவே படைக்கப் பட்டிருக்கின்றனர். ஆனுல் நம்முள் ஏழை என்றும் பணக்காரன் என்றும் சொல்லிக்கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிருேம்.

—பிளாட்டோ

மற்றவருக்கு உதவிசெய்வது கடமையல்ல; அது ஒரு இன்பம். அது எமக்கு ஆரோக்கியத்தையும் சந்தோஷத்தையும் அதிகப் படுத்துகின்றது

—ஸோராஸ்டர்

உலகம் பழக்கும் தீயொழுக்கத்தை விட்டுவிட்டால் மொட்டையடித்தலும், சடை வளர்த்தலுமாகிய வேடதாரிகளின் புறக்கோலங்கள் தேவையில்லை

—வள்ளுவர்

உண்மையும் நேர்மையும்தான் ஆக்கும் சக்திகள் என்பதை நினைவுறுத்திக் கொள்வோமாக அந்த உறுதியிலே இறுதிவரைக்கும் நாமறிந்தவரை, நமது கடமையைச் செய்ய முற்படுவோமாக.

—லிங்கன்

ஒருவருக்குச் செயலாற்றும் சக்தி இருக்கலாம்; ஆனுல் அவருக்குச் செயலாற்றும் உறுதி இல்லாவிடில தோல்வி அவரைப் பின் தள்ளும்.

—எலியட்

தொகுத்தவர்:
"தமிழ் நேசன்"
நல்லூர்.

# புத்தர் தரிசித்த நயினு தீவு

## அங்குள்ள மாணவர்கள் நாணயம் மிகுந்தவர்களாம்

## தொலைத்து விட்ட பொருட்களை கண்டெடுத்துக் கொடுக்கும் நேர்மை

(சோம. லெ. இலக்குமணச் செட்டியார்)

சாதாரணமாக இலங்கைக்குச் செல்பவர்கள் யாழ்ப்பாணத்திற்குச்செல்லுவதில்லை. யாழ்ப்பாணத்திற்குச் செல்பவர்கள்கூட தீவுப் பகுதிகளுக்குப் போவதில்லை. யாழ்ப்பாணத்திலுள்ளவர்களிலும், தீவுப் பகுதிகளைப் பார்க்காதவர்கள் பல்லாயிரவர் உள்ளனர். பிறர் செல்லாத இடங்களுக்குச் செல்வதில் எனக்கு எப்போதுமே ஒரு தனி ஆர்வம் உண்டு ஆகையால் சில தீவுகளுக்கு நான் "சமூகம்" கொடுத்தேன். இவற்றுள் முக்கியமானது மணிபல்லவம் என்று சொல்லப்படும் நயினு தீவு. காவிரிப் பூம்பட்டினத்திற்குத்தென் கிழக்கே உள்ள தீவு என்றும், "மணிமேகலையை மணிபல்லவத்துய்த்து" என்றும் ஐப்பெருங் காப்பியங்களுள் ஒன்ருன மணிமேகலையில் இத்தீவு குறிக்கப்பெற்றிருக்கிறது. இங்கே புத்தர் தரிசித்தார் என்று ஒரு வரலாறு வழங்கி வருவதால் பௌத்தர்களுக்கு இது ஒரு பெரிய தலமாக இருந்துவருகிறது.

யாழ்ப்பாணத்துக்கோட்டையிலிருந்து யான் புங்குடு தீவுக்குச் சென்றேன். இங்கிருந்து வள்ளம் (சிறு படகு) ஒன்றில் அரை மணித்தியால நேரத்தில் நயினு தீவை அடைந்தேன். இக்கடற்பாதை மேடு பள்ளம் நிறைந்தது. பல இடங்களில் வள்ளம் கற்களுடன் மோதிற்று ஸ்ரீ ராமர் அணை இருப்பதாக படகோட்டி தெரிவித்தான். இவ்விரு தீவுகட்கு மிடையே சாலை அமைக்க முயற்சிகள் நடைபெறுவதாகவும் அறிந்தேன். கடலின் நடுவிடத்தில் கொக்குகள் தங்கும் மேடு ஒன்று இருக்கிறது. நரிகளும் இந்தக் கடலைத் தாவுகின்றன. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சப்த (ஏழு) தீவுகள் இருக்கின்றன. இவற்றுள் புகழ்பெற்ற நயினுதீவு மிகப்பெரிய மொடு தீவு. யாழ்ப்பாணத்திலிருந்து இயந்திரப் படகு (மோட்டார் லாஞ்சு)வாயிலாகவும் நயினு தீவுக்கு வரலாம். இவை யாழ்ப்பாணத்திலிருந்து 15 கட்டை (மைல்) தொலைவிலுள்ள ஊர்காவற்துறையிலிருந்து புறப்படுகின்றன

நயினு தீவின் நீளம் இரண்டரைக் கட்டை. அகலம் முக்கால் கட்டை. இங்கே நான்கு (சைவ, இஸ்லாமிய. கிறித்தவ, புத்த) சமயத்தவர்கள் உள்ளனர் இந்தத்தீவில் மொத்தம் நாலாயிரம பேர் வாழ்கின்றனர். நெல், தேங்காய், சிறுதானியம், வரகு பயறு, புகையிலை, கத்தரிக்காய் ஆகியவை இங்கே ஏராளமாகக் கிடைக்கின்றன. பாய் முடைவது, கூடை பின்னுவது, மீன்பிடிப்பது போன்ற தொழில்களும் இங்கே மிகுதி இங்கு மீன் பிடிக்கவோ, வள்ளம் ஓட்டவோ தத்துவம் (லைசன்சு) வேண்டுவதில்லை. ஆனி, ஆடி மாதங்களில் நடைபெறும் உற்சவங்களின் போது மெத்தத் திரளான ஜனங்கள் இங்கே வந்து போகிருர்கள். இங்கேயுள்ள புத்தர்கோயில் அண்மையில் புதுப்பிக்கப்பெற்றிருக்கிறது. இந்தப் புத்தர் கோயிலில் பிள்ளையார் விக்கிரகம் ஒன்றும் இருக்கிறது. புத்தர் கோயிலுக்கு நாள்தோறும் ஏறத்தாழ நூறு யாத்ரீகர்கள் வருகிருர்கள். நயினு தீவில் இந்தக் கோயிலுக்கு மட்டுமே மின்சார விளக்கு வசதி உண்டு. ஏனைய புத்தர் கோயில்களில் இருப்பதைப் போன்று இங்கேயும் இரண்டு மூன்று பிக்குகளும் இருக்கிருர்கள்.

நயினு தீவிலுள்ள அம்பாள்கோயில் துறைமுகத்திற்கு எதிரில் இருக்கிறது. இந்த அம்பாள் கோயிலுக்குள் ஆண்கள் சட்டை போட்டுகொண்டும் மதுபானம் அருந்தியிருக்கும் போதும் செல்லக்கூடாது. இக்கோயில் திருவிழாவின் போது ஆண்டுதோறும் 20,000 இந்துக்கள் இந்தத் தீவுக்கு வருகிருர்களாம். 64 சத்திபீடங்களுள் ஒன்ருன ஸ்ரீபுவனேஸ்வரிபீடம் இக்கோயிலேயென்று கருதப்படுகிறது. இக்கோயிலில் சில கல்வெட்டுகள் உள்ளன. பொதுவாகபுதைபொருள் ஆராய்ச்சியாளர்க்கு நயினுதீவில் மிகுதியான வேலை உண்டு.

நயினுதீவின் மத்தியில் இத்தீவில் பிறந்தவரும் சீவன் முக்தராய் விளங்கியவருமான ஸ்ரீ முத்துக்குமாரசாமி அவர்களின் சமாதி இருக்கிறது. இவரது சீடர்கள் ஈழமெங்கும் உள்ளனர். மூன்று ஆண்டுகட்கு முன் இவர் சமாதிஅடைந்த போது இத்திருப்பணி கட்டி முடிக்கப்பெற்றது. இப்பெரியாரால் தோற்றுவிக்கப்பெற்ற ஒரு சிறந்த திருக்குளம் சமாதிக்கு வடமேற்கே கூட்பிடு தொலையில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது.

நயினு தீவு சில துறைகளில் காலத்திற்கேற்ற முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இங்கே இலங்[illegible] [illegible] னர். ஏழைகளுக்கு கடற்கரையோரத்தில் அரசியலார் செலவில் வீடுகள் கட்டப்பெற்றிருக்கின்றன. நயினுதீவில மலக்கூடுகளும் உள்ளன. சுகாதார அலுவலர் ஒருவரும் இருக்கிருர்.

யாழ்ப்பாணத்தின் வாயிலாகத்தான் நயினுதீவுக்கு வெளியுலகத்தோடு தொடர்பு உண்டு. இவ்விரு இடங்களையும் கம்பியில்லாத் தந்தி இணைக்கிறது. கம்பியில்லாத் தந்திநிலையம் ஒன்று நயினுதீவில் இருக்கிறது,

நயினு தீவுப் பயணத்தை யான் ஒருகாலும் மறக்க இயலாது. அங்கேயுள்ள மக்களின் அன்பு அளவு கடந்தது. யான் அந்தத் தீவுக்கு வருவேனென்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. அங்கே பொதுக்கூட்டம் நடந்து சில ஆண்டுகள் ஆகி விட்டதாம். ஆகையால் அங்குள்ள ஆசிரிய அன்பர்கள் என்னை அன்றிரவு அங்கே 'சுணக்கி' ஒரு கூட்டத்திற்கு 'ஆயத்தம்' செய்துவிட்டார்கள். 'பறை போட்டு' ஊர் முழுவதும் 'அறிவித்தல்' செய்தார்கள். கூட்டத்திற்கு 'நியாயமான சனங்கள்' வந்திருந்தார்கள். அங்கே பூமாலை கிடைப்பது அருமையாயிருந்தும் அன்பர்கள் 'மெனக்கட்டு' அவற்றைக் கொண்டுவந்தனர். யான் பேசி முடிந்ததும் கூட்டத்தினர் சரமாரியாகக் கேள்வி கேட்டனர். அதிலிருந்து அவர்களுடைய தமிழ்ப் பற்றையும் அறிவுப் பசியையும் தெரிந்துகொள்ள எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அதன் பிறகு பேசிய அன்பர்கள் "தமிழறிஞர் பலர் தங்கள் தீவுக்கு வரவேண்டு"மென்று கேட்டுக்கொண்டனர். கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய (பெரிய வாத்தியார் என்று அப்பகுதி எங்கும் புகழ்பெற்ற) ஆசிரியர் எஸ். என். கந்தையா அவர்கள் நயினு தீவிலுள்ள மாணவர்களின் நாணயத்தைப் பெரிதும் பாராட்டினுர். யாத்ரீகர்கள் தொலைத்துவிட்ட விலை உயர்ந்த பொருள்களை அந்த இளைஞர்கள் கண்டெடுத்து உரியவர்களிடம் ஒப்புவித்த நிகழ்ச்சிகள் சிலவற்றையும் எடுத்துக் கூறினுர்.


### நயினு தீவில் இருப்பவை

கடல்தாமை, கடற்பாசி, பாம்புகள், ஒரு சப் போஸ்டாபீஸ், பல இடங்களில் தபால் பெட்டிகள், நேரான சாலைகள், இரண்டு வாசிகசாலைகள், (வாசகசாலைகள்) அரசாங்கத்தார் நடத்தும் பள்ளி உட்பட மூன்று பள்கள், ஏராளமான சைக்கிள்கள். ஒரு மான், இரண்டு வானெலிப் பெட்டிகள், ஒரு மருத்துவச்சாலை.

### நயினுதீவில் இல்லாதவை

கலங்கரை விளக்கு (லைட் ஹவுஸ்), மோட்டார் கார், போலீஸ் ஸ்டேஷன். அணில், கீரி.

(தமிழ் நாடு)



நவீனயந்திரசாதனங்களைக்கொண்டபுதிய நாசகாரிக்கப்பல். அதன்எடை 2610 தொன்.

# தியாகி ரகு

(10-ம் பககத் தொடர்ச்சி)

ஆம் என்பதற்கு அடையாளமாக சும்மா தலையை அசைத்தேன்.

"இறக்கவிருந்த மனேகரியை எந்த ரகுநாதன் காப்பாற்றினுனே அவனுலே தான் இப்பொழுதும் அவள் உயிரைக் காக்க முடியும்" என்று தளதளத்த குரலில் சீதாராமன் கூறினுர். நான் பதில் பேசவில்லை.

நான் எழுந்து "போய் வருகிறேன்" என்றேன்.

"அப்ப............மனேகரியின் நிலை......?" என இழுத்தார் சீதாராமன்.

"நாளை கூறுகிறேன்" என்று கூறித் திரும்பி நடந்தேன்.

அப்பொழுதும் அவள் கண்ணிலிருந்து நீர் ஊற்றெடுக்க ஜன்னலைப் பிடித்தபடி என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"கனகு! என்ன தானப்பா செய்வது? நீயாவது ஒரு வழி சொல்லடா?"

"ரகு! நீ அவளை ஏற்றுக் கொள். அதுதான் சிறந்த வழி; உன்னை நினைந்து உனக்காக ஒருத்தி உயிர் விட அதனைப் பொருட்படுத்தாது நீ செய்யும் தேசத் தொண்டுக்கு என்ன அர்த்தம்? தேசத் தொண்டென்ருல் நல் அரசியலை ஆக்குவது மட்டுமல்ல; நற்போதனைமூலம் மக்களை நல்வழிப் படுத்துவது மட்டுமல்ல; மக்களுக்காக உயிரையும்விடத் தயாராயிருக்க வேண்டும். இப்பொழுது உனது அன்பை நாடி ஒரு பெண் வாடுகிருள். நீ இவ்வன்பை அவளுக்குக் கொடுத்தே தீர வேண்டும். அதுதான் தேசத் தொண்டு. அதுதான் தியாகம். இப்பொழுதே சென்று உனது சம்மதத்தைத் தெரிவி" என்று கனகசபை குட்டிப் பிரசங்கம் செய்து முடித்தான்.

அடுத்து வந்த நன் முகூர்த்தத்தில் தியாகி ரகுநாதனுக்கும் மனேகரிக்கும் திருமணம் நிறைவேறியது. கனகசபைபோன்ற சினேகிதர்களும் பொதுமக்களும் ரகுநாதனின் தியாகச் செயலை மெச்சினர். ரகுநாதனும் மனேகரியும் சேர்ந்து எப்பொழுதும் நாட்டுக்குத் தொண்டு செய்வோம் என சபதம் செய்துகொண்டனர். (ரயவும் கற்பனையே)

மாதவிடாய் நின்றுபோனதா?
நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688
எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிகலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)
கர்ப்பத்தடை
நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered. No. 266
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பாவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)
இலங்கை ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11
Mfgrs: SEENU & CO., POST BOX. 1636, MADRAS-1
சிங்கப்பூர்: 194 SERANGOON ROAD, சிங்கப்பூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிங்ஸ்லி
[கொழும்பு]

## மாபெரும் வெற்றி விஜயம்!

# வெம்பிளி
[கண்டி]



- சுவையான டமுச்குலை அக்குடும்பம் – ஆனல் சூருவளியிலே மரம் சாய்ந்தது–எனவே கனிகள் நான்கும் நான்கு மூலையில் சிதற 'முகாரி' பின்னணி தேமாயிற்று.
- நாளிலே ஒரு கனி. அதைச் சுவைக்க நானுவித அணில்கள், பகட்டுக் காட்டியது ஒரு அணில். பல்லைக் காட்டியது இன்னொரு அணில். பட்டை தீட்டிக்கொண்டது வேறொரு அணில்.
- டடாடோடப் — டணப் — பச்தி இவைகளுக்கு மத்தியில் — தத்தளித்த வாழ்வுச் சோலை அமைதிபெற்றது. உருண்டுபோன கனிகள் ஒரே குலைக்கு வந்தன.

**அரிய சந்தர்ப்பம்!**
**காணத் தவறாதீர்கள்!!**


## சிவாஜி கணேசன், எஸ். வி. சகஸ்ரநாமம்,
## டி. கே. ராமச்சந்திரன், ஸ்ரீ ரஞ்சனி, சுசீலா,
## முத்துலக்ஷ்மி முதலியோர் நடித்தது.


குமாரி கமலாவின் அழகுக் கலை நடனம்

மேலும்

பாரதியின் பாடல் – அத்துடன்

**பாரதிதாசன், கருணாநிதி, உடுமலை நாராயணக்கவியின் பாடல்கள்**





பின்னணிக் குரலோசை:

**எம். எல். வஸந்தகுமாரி,**
**சிதம்பரம் ஜெயராமன்,**
**டி. எஸ். பகவதி, எம். ராஜேஸ்வரி**

# பராசக்தி

## மைலனில்:
## "சபிஸ்தான்"
[உயரிய ஹிந்திச் சித்திரம்]

## காமினியில்:
## சர்க்கஸ் அரங்கத்தில்
[ரஷ்ய சர்க்கஸ் படம்]!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 1??ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் சார்பில் 194ம் தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1952 டிசம்பர் 7ந்தேதி பிரசுரம் செய்யப்பட்டது.